புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1944-ம் வருஷம் நவம்பர் மாதம் 11உ [நெ. 223

தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.
—22-ம் பக்கம் பார்க்க.

பிரஸங்கம் CCXXIII.

ரூஸ்வெல்ட் நான்காவது தடவையாக அமெரிக்காவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

ரூஸ்வெல்ட் நான்காவது தடவையாக அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்ற நற்செய்தி கிடைத்திருக்கிறது. அவருக்கு இது தனிப்பட்ட கௌரவம். இதுவரையில் எவரும் இரண்டு தகுதிக்குமேல் அந்தப் பதவியிலிருந்ததில்லை.

வோட்டுகள் எண்ணப்பட்ட சில மணிகளுக்கெல்லாம் தேருதலின் முடிவு நிச்சயமாகி விட்டது. ரூஸ்வெல்டுக்கு எதிரியாக நின்ற டூயி ரூஸ்வெல்டின் வெற்றியை ஒப்புக்கொண்டு அவருக்கு ஆசியைத்தெரிவித்தான்.

இந்த வெற்றியுடன் ரூஸ்வெல்டைச் சேர்ந்த ஜனநாயகக் கக்ஷியும் பிரதிநிதிகள் சபையிலும் அநேக ஸ்தானங்களைக் கைப்பற்றி விட்டன.

அமெரிக்காவிலுள்ள பலவிதமான ராஜீய அபிப்பிராயமுள்ள கக்ஷிகளும், நேசதேசத்தார்களும் இந்த முடிவை வரவேற்கிறார்கள். ஏனெனில் யுத்த சம்பந்தமாக அமெரிக்காவின் கொள்கையில் தொடர்ச்சியிருக்குமென்பது தேருதலின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. ஜனநாயகக் கொள்கைகளின் உருவெடுத்தவர் என்றே ரூஸ்வெல்டைச் சொல்லலாம். அத்துடன் யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமென்ற அமெரிக்கரின் ஊக்கமும் அவரிடம் உருவெடுத்திருக்கிறது. இதுவரையில் அவர் யுத்தத்தை நடத்தியதை அமெரிக்கா ஒப்புக்கொண்டதென்றும், எதிர்காலத்திலும் அதுபோன்ற நடவடிக்கைகள் நடைபெறும் என்பது உத்தரவாதம் செய்யப்பட்டதென்றும் தேருதல் வெளிப்படுத்துகிறது.

ரூஸ்வெல்ட்டுக்கு நேசதேசத்தார்கள் அநேக முறைகளில் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவருடைய பிரயாசையினால்தான் அமெரிக்கா ஒரு வியவகாரத்திலும் தலையிடாமலிருந்த நிலமையை மாற்றிப் போரில் இறங்கும் மனப்பான்மையை அடைந்தது. சாமான்களைப்

பொருளுக்கு விக்கிரயம் செய்ததிலிருந்து குத்தகைக் கடன் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அச்சு நாடுகளின் பூரா சக்தியையும் பங்கப்படுத்தக் கூடியவரையில் அமெரிக்கா உற்பத்தியை அதிகரித்தது. எதிர்த்து நிற்கமுடியாத தரைப்படை, கடற்படை, விமானப்படை மூன்றையும் அமெரிக்கா திரட்டியது.

மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கும், பிரிட்டனுக்கும், ரூஸ்வெல்ட்டின் தேருதல் இரண்டு ஆங்கிலபாஷையைப் பேசும் நாடுகளுக்குள்ள ஒற்றுமையைத் தொடரும்படி செய்துவிட்டது. இவ்விரண்டு நாடுகளுக்குள் ராணுவ ஒப்பந்தத்துடன் ராஜீய உடன்படிக்கையும் பலமடைந்துவிட்டது.

உலகத்தாருக்கு அட்லாண்டிக் சாஸனத்தையும், நான்கு சுதந்திரங்களையும், யுத்தத்துக்குப்பின் சமாதானத்தை நிலை நாட்ட டம்பார்டன் ஒக்ஸ் மஹாநாட்டில் முடிவு செய்யப்பட்ட உலக பத்திர திட்டங்களையும், நிறைவேற்றக்கூடியவர்கள் வந்துவிட்டார் என்ற நம்பிக்கை உண்டாகுகிறது.

கடவுள் அவருக்கு நியந்தாவாக இருக்கவேண்டுமென்ற பிரார்த்தனையுடன் இந்தக் கட்டுரையை முடிவு செய்வோம்.

இங்கு இரண்டு குறிப்புகளை அச்சிடுவோம். ஒன்று அவர் தேர்தலுக்காக கடைசியாகச் செய்த ஒலிபரப்பு. இரண்டு, நவம்பர் 2-ம் தேதியன்று அமெரிக்காவின் நன்றி அறிவிப்பு தினத்தன்று வெளியிடப்படும் பிரகடனம். அவைகள் அவருடைய அபிப்பிராயத்தையும், அவருடைய பக்தியையும் வெளியிடுகின்றன.

(1) "25 வருடங்களுக்குள் நம்முடைய மக்கள் யுத்தக் கவலைகள், கஷ்டங்களின் மத்தியில் தைரியமாக சந்தோஷமாக இருக்கும் சமயங்கள் நேரிட்டன. இனிமேல் அவ்விதம் கஷ்டத்தை அனுபவிக்க எவரும் விரும்பவில்லை.

உலகத்தின் வெகு தூரத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கு விமான மூலம் செல்லுவதற்கு அவசியமான வேகத்தையும், தூரத்தையும் நினைக்கும்பொழுது புதிய நெடுந்தூரம் செல்லும் வெடி குண்டுகளால் பிரிட்டனுக்கு ஏற்பட்ட அழிவை நாம் மதித்துப்பார்க்கவேண்டும். மற்றொரு யுத்தம் மூண்டால் நாகரீகம் படைத்த பொது ஜனங்களுக்கு இன்னும் அதிகமான நாசமும், அழிக்கும் சக்தியும் கிடைத்துவிடும். விமானங்களிலிருந்தும் கடலில் நிற்கும் கப்பல்களிலிருந்தும் போடப்படும் வெடிகுண்டுகள் அமெரிக்காவுக்குள் வருவதை மிகவும் சக்திவாய்ந்த கடற்கரை பீரங்கிகளும் தடுத்துவிட முடியாது. இந்தத் தடவை சமாதானத்தை விரும்பும் நாடுகளெல்லாம் யுத்தத்தை பகிஷ்காரம் செய்து அதைத்தலைகாட்டவொட்டாமல் தடுக்கும் தீர்மானத்துடன் ஒன்றுபடவேண்டும். ராஜீயத்திலுள்ள கக்ஷி பிரதிக்கக்ஷி வியவகாரங்களைப் பற்றி நான் இன்று பேசப்போவதில்லை. ராஜீயப்போர் முடிவடைந்துவிட்டது. இனிமேல் எதிர்காலத்தைப்பற்றி சிந்தித்து உள்நாட்டிலும், போர்முனைகளிலும் நமக்குள் ஒற்றுமை ஏற்படும் முறைகளைத் தேடவேண்டும். உலகத்திலேயே நமது நிர்வாகம் தான் உயர்வானதென்று உலகத்தாருக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று அமெரிக்கர்கள் பிரியப்படுகிறார்கள். நம்முடைய துருப்புகள் வெற்றிக்காகப் பாடுபடுகிறார்கள். அவர்களுக்காகவும் நாம் சாசுவதமான சமாதானத்தை நிலைநாட்ட ஏற்பாடு செய்யவேண்டும்."

(2) "கொடுங்கோன்மையிலிருந்து மிலியன்கள்கணக்கான ஜனங்கள் விடுதலைபெற்ற இந்த வருஷத்தில் தனிப்பட்ட முறையில் நமக்கும் நம்முடைய தேசத்துக்கும் ஆண்டவன் அருள் செய்ததற்காக அவருக்கு நம்முடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவோம். நமது வெற்றிகளின் மூலமும் நேசதேசப் படைகளின் வெற்றிகள் மூலம் அவர் மற்ற நாடுகளிலுள்ளவர்களுக்கு சமாதானத்தை நிலைநாட்டியிருக்கிறார்.

நமது வாழ்க்கை முறைகளுக்கு அழிவு அபாயம் ஏற்படாமலல்ல. நம்மைக் காப்பாற்றியதற்கும், நம்முடைய தேசத்தின் வலிமைக்காக நமது மக்களுக்கு ஒன்றுபட்ட மன உறுதியை அளித்ததற்கும், ஸ்வதந்திரத்தில் நமக்குள்ள அழியாத நம்பிக்கைக்கும், சாச்வதமான சமாதானம் ஏற்படுமென்ற வாக்குறுதிக்கும் நாம் கடவுளிடம் வழிபடவேண்டும்.

நமக்குக் கிடைத்த அறுவடைக்கும், அதன் மூலம் மற்றவர்களுக்குக் கிடைத்த உதவிக்கும், நமது ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றக்கூடிய யுத்த முஸ்தீப்புகளைத் தயாரிக்க உதவிய பூமிதேவிக்கும், இன்னும் மனதார நமக்குக் கிடைத்த அநேக சௌகரியங்களுக்கும் நாம் ஒன்றுபட்டு கடவுளுக்கு நம்முடைய செய்நன்றியைத் தெரிவிக்கவேண்டும்."

வார யுத்தச் செய்திகள்.

(A)-முக்கியமான சம்பவங்கள்.

31—10—44 (செவ்வாய்க்கிழமை).	பிலிப்பைன்ஸில் லெயிடியில் அமெரிக்கப்படைகள் ஒன்று பட்டன.
	பிரிடிஷ் படைகள் கிரீஸில் ஸலோனிகாவை அடைந்தன.
1—11—44 (புதன்கிழமை).	பிரிடிஷ் கமாண்டோ படைகளும், மாரின் படைகளும் வால்செர்னில் இறங்கின.
2—11—44 (வியாழக்கிழமை).	அமெரிக்க 1-வது படை ஆக்கனைத்தாண்டி ஜெர்மனிக்குள் புதிய தாக்குதலைத் துவக்கிவிட்டது.
	ருஷ்யர்கள் ஹங்கேரியில் புடாபெஸ்டின் எல்லைச் சரகங்களை அடைந்தார்கள்.
3—11—44 (வெள்ளிக்கிழமை).	பிரிடிஷ் படைகள் ப்ளஷிங்கையும், ஸிபிரக்கியையும் விடுவித்தன.
4—11—44 (சனிக்கிழமை).	ஹாலந்தில் மாஸ் நதிக்குத் தெற்கில் பிரிடிஷ் 2-வது படை புதிய தாக்குதலைத் துவக்கியது.
	நேசதேசப் படைகள் கிரீஸ் பூராவையும் விடுவித்தன.
5—11—44 (ஞாயிற்றுக்கிழமை).	சூபர் பறக்கும் கோட்டைகள் சிங்கப்பூரிலுள்ள கப்பல் ஸ்தலங்களை ஜப்பானிய ஆக்கிரமிப்புக்குப் பின் முதல் தடவையாக பட்டப் பகலில் நொறுக்கிவிட்டன.
6—11—44 (திங்கட்கிழமை).	மத்திய கிழக்கில் பிரிடிஷ் மந்திரியாக இருந்த மோயன் கெயிரோவில் கொலை செய்யப்பட்டார்.
7—11—44 (செவ்வாய்க்கிழமை).	பிரிடிஷ் படைகள் பர்மாவிலுள்ள கென்னடி குன்றைப் பிடித்தன.
8—11—44 (புதன்கிழமை).	மிஸ்ட்டர் ரூஸ்வெல்ட் நாலாவது தடவையாக அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

(B)-செய்திச் சுருக்கம்.

மேற்குப் போர்முனை.—இந்த வாரத்தில் முக்கியமாக மூன்று வெற்றிகள் கிடைத்தன:—

(1) பெல்ஜியம் பூராவாக விடுதலை பெற்றது. (2) ஷெல்ட் நதியின் முகத்துவாரத்திலிருந்த ஜெர்மன் எதிர்ப்பு குலைக்கப்பட்டது. (3) வால்சர்ன் தீவின் வடக்குப் பக்கத்திலிருந்த எதிரி சுத்தி செய்யப்பட்டான்.

(1) வால்செர்ன், ஷெல்ட் நதிப்பகுதி.—வால்செர்ன் தீவிலுள்ள மேற்கு காபாலியில் படைகளிறங்கியபின் நேசதேசப்படைகள் பிளஷிங்க், ஸிப்ரக்கி, நாகி, ஆர்னமுயிடன், டாம்பர்க், நியூவாலாந்து, வீர் தீவின் தலைநகரமான மிட்டில்பர்க் முதலியவற்றைப் பிடித்தன. வால்சர்னிலிருந்து ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் மார்க்கத்திலுள்ள ஷௌவனைப் பிடித்துவிட்டார்கள்.

(2) மாஸ் நதிப் பிராந்தியம்.— மாஸ் நதியின் தெற்குக் கரை பூராவும் நேசதேச ஆதிக்கத்துக்குட்பட்டது. வாகன்பர்க், ஸ்டீன்பெர்கன், கிர்ட்ருடென்பர்க், ஹ்யூஸ்டன், வில்லெம்ஸ்டெட் பிடிபட்டன.

(3) ஆகன் பகுதியில்.—நேச தேசப்படைகள் ஜெர்மீட்டர், வோஸனுக்கைப் பிடித்தன. ஜெர்மானியர்கள் ஸ்மிட்டைத் திரும்பிப் பிடித்துவிட்டார்கள். ஜெர்மன் படை முன்னேறிவிட்டன. அதன் பீரங்கிகள் ஹர்ட்கென் முனையில் பலமாக அமைக்கப்படுகின்றன.

(4) வாஸ்கஸ் பிரதேசத்தில்.—அபாகோர்ட், லெட்ரிகோர்ட், பாக்கார்ட், கெலர்கோர்ட், டினேவர் முதலிய இடங்கள் பிடிபட்டன.

ருஷ்யா.—ஹங்கேரியில் செம்படை சோல்நிஸ்க், கெக்னட், அபோனியை விடுவித்தன. புடாபெஸ்டுக்குள் நுழைந்துவிட்டன.

யூகோஸ்லாவியர்கள் கோடர் விரிகுடாவிலுள்ள பெரஸ்டை மீட்டன. வார்தார் பள்ளத்தாக்கில் போர் நடைபெறுகிறது.

இதாலி.—ரெஸ்கோ நதியைத் தாண்டியபின் 8-வது படை போர்லிக்குப்போகும் வழியிலுள்ள மெல்டோலாவைச் சுத்தி செய்துவிட்டது. 5-வது சேனை பொலோனுவுக்குப்போகும் வழியிலுள்ள காஸெட்டாவைப் பிடித்தது. போலிஷ் படைகள் முஸோலினியின் ஜன்ம பூமியான பிரெடாப்பியோவையும், மார்சிக்னேனேவையும், மாண்டி டெஸ்டாவையும், மாண்டி மாக்கியோரியையும் ஸான் மார்டினே இனுவெல்லாவையும் பிடித்தார்கள்.

பிலிப்பைன்ஸ்.—லெயிடியில் ஆர்மா பள்ளத்தாக்கில் அமெரிக்கர்கள் எதிரிகளுடன் கடும் போரை நடத்துகிறார்கள்.

நவம்பர் 4, 5 தேதிகளில் மணிலாவும், தெற்கு லூசானும் விமானம் மூலம் தாக்கப்பட்ட பொழுது ஆறு ஜப்பானிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 24 கப்பல்கள் நாசமாக்கப் பட்டன. 440 விமானங்கள் அழிக்கப்பட்டன.

பர்மா.—நேசதேசப்படைகள் இண்டாவிலிருந்து 28 மைல்களிலுள்ள மாவூவையும் சின் மலைகளிலுள்ள கென்னடிக் குன்றையும் கைப்பற்றியபின் சிண்ட்வின் பள்ளத்தாக்கிலுள்ள எதிரியின் அடுத்த ஸ்தானமான வெண்மைக் கோட்டையைத் தாக்கிவருகிறார்கள்.

சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் முதன் முதலாக சிங்கப்பூரைத் தாக்கின.

சைனு.—ஸால்வின் நதிக்கு மேற்கில் 25 மைல்கள் தூரத்திலுள்ள லங்க்லிங்கை சீனர்கள் பிடித்துவிட்டார்கள். சைனுவிற்குப் போகும் தரை மார்க்கம் இதன் மூலம் திறக்கப்பட்டுவிடும்.

ஜப்பானியர்கள் குவாங்க்ஸி மாகாணத்தின் தலைநகரமான க்வெலினுக்குள் நுழைந்துவிட்டார்கள்.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

29—10—44. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—பீரங்கி பாட்டரிகள், ஹாலந்திலுள்ள ஊஸ்ட் ஸுபெர்க் (Oost Souberg).

பீரங்கி ஸ்தாபனங்கள், துருப்புகள்.-பிரான்ஸிலுள்ள காபெல்லி (Kapelle).

ரயில்வேக்கள், பாலங்கள்.—ரைன்லாந்து (Rhineland).

எதிரி போக்குவரத்துகள்.-ஹாலந்து (Holland), ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள், ஆஸ்திரியா (Austria),

பீரங்கி ஸ்தாபனங்கள், மோட்டார் ரயில் போக்குவரத்துகள் பாலங்கள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

கப்பல்கள்.—அட்ரியாடிக் (Adriatic).

ராணுவப் போக்குவரத்துகள்.—ஆல்பேனியா (Albania).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (37 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)

இரவு.—ரயில்கள் ஜெர்மனி (Germany), ஜெர்மனியிலுள்ள பெர்லின் (Berlin).

தூரக்கிழக்கு (Far East).

ராணுவ நிலயங்கள்.—இந்தோ-சைனுவிலுள்ள ஹானுய் (Hanoi).

ஜப்பானியச் சைனியங்கள்.—மார்ஷல் (Marshall) தீவுகள்.

பர்மா (Burma).

ஜப்பானியத் துருப்புகள்.—பாலம் (Falam), ஹாகா (Haka).

விமான நிலயங்கள்.—ஹீஹோ (Heho), மெய்டிலா (Meiktila).

30—10—44. (திங்கட்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.-தொழிற்சாலை போக்குவரத்து இலக்குகள்—ஹாம் (Hamm), மன்ஸ்டர் (Munster).

எண்ணெய்க் கிணறுகள்.-ஹாம்பர்க் (Hamburg).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—வெஸ்ஸலிங் (Wesseling).

எதிரி தற்காப்புகள்.-வால்சரன் (Walcheren).

போக்குவரத்துகள்.—ஹாலந்து (Holland).

ரயில்வே தளங்கள்.—கெர்பன் (Kerpen).

ரஸ்தா, நதி ரயில் போக்குவரத்துகள்.—*இதாலியில் யுத்தம் நடக்கும் அரங்கத்திக்குப்பின்.*

பாலங்கள், ரஸ்தாக்கள், ரயில்வேக்கள்.—*பால்கன்ஸ்* (Balkans).

விமானச்சண்டைகளும்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (50 எதிரி விமானங்கள் நாச மாக்கப்பட்டன).*

இரவு.-தொழிற்சாலை இலக்குகள்-கொலோன் (Cologne).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—*மார்ஷல்ஸ்* (Marshalls), *பாராமுஷிரோ* (Paramushiro) *இந்தோ-சைனாவிலுள்ள ஹனாய்* (Hanoi),

பர்மா (Burma).

ஜப்பானியக் கடற்கரை தளம்.—*டாங்குப்* (Taungup).

31—10—44. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—*பாட்ராப்* (Bottrop).

பிரங்கிகள், நிலயங்கள், தளவாடக் குவியல்கள்.—*வால்செரன்* (Walcheren) *தீவு.*

எண்ணெய்க் கிணறுகள்.—*வெஸ்ஸிலிங்* (Wesseling).

இலக்குகள்.—*போ* (Po), *சமவெளி.*

போக்குவரத்துகள்.—*வட இதாலி*(Northern Italy).

விமானச் சண்டைகள்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும். (20 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).*

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்.—*கொலோன்* (Cologne).

கடற்படை தளம்.—*ஹெம்பர்க்* (Hamburg).

விமான நிலயங்கள்.—*ஜெர்மனி* (Germany).

தற்காப்புகள்.—*பிளஷிங்* (Flushing).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி ஸ்தாபனங்கள், கப்பல்கள்.—*ஆர்மாக்* (Ormoc).

இலக்குகள்—*செபு* (Cebu) *தீவு.*

பர்மா (Burma).

ஸப்ளை தளம்.—*சிண்ட்வின்* (Chindwin).

விமான நிலயங்கள்.—*மத்திய பர்மா* (Central Burma).

1—11—44. (புதன்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—இலக்குகள்—*ஜெர்மனியிலுள்ள ரூர்* (Ruhr).

பாலம்.—*நான்ஸி பிரதேசத்திலுள்ள டியூஸ்* (Dieuze).

போக்குவரத்து இலக்குகள்,—*போ* (Po) *சமவெளி, யூகோஸ்லாவியா* (Yugoslavia).

கப்பல்கள்.—*வட எட்ரியாடிக்* (North Adriatic), *டால்மேஷியன்* (Dalmatian).

ரயில் தளங்கள்.—*லாடிஸானு* (Latisana)

விமானச் சண்டைகள்.—*கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்,*

ஜெர்மனியிலுள்ள ஆட்னுபர்க் (Odnabruck).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்.—*ஹேம்பர்க்* (Hamburg).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.-*பாகோலாட்* (Bacolod).

ஸ்தாபனங்கள்.—*டைமாண்டி* (Diemonte), *மிண்டானோ* (Mindanao).

இலக்குகள்.—*ஸெலிபெஸ்* (Celebes), *அம்பாய்னு* (Amboina), *டிமோர்* (Timor), *நியூ கினியா* (New Guinea), *பிஸ்மார்க்* (Bismark)—*ஸாலமன்ஸ்* (Solomons).

பர்மா (Burma).

விமான நிலயங்கள்.-*நாம்ஸாங்* (Namsang), *மெக்டிலா* (Metktila), *ஷ்வேபோ* (Shwebo).

எதிரி சைனியங்கள்.-*போர்ட் வொய்ட்* (Fort White).

போக்குவரத்து ஸாதனங்கள்.—எதிரி சைனியங்கள், ஸப்ளை தளம்.—*சிண்ட்வின்* (Chindwin).

ரயில்வே பாலம்—*டாரா* (Dara).

2—11—44 (வியாழக்கிழமை)

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—விமானச் சண்டைகள்.—*ஐரோப்பா* (Europe).

(208 *ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 69 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).*

தொழிற்சாலை இலக்குகள்.—*டஸ்ஸல்டார்ப்* (Dusseldorf).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள், இதர இலக்குகள்.—*மேற்கு ஜெர்மனி* (Western Germany).

தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள்,—*ரூர்* (Ruhr).

போக்குவரத்து இலக்குகள்.—*ஹாலந்து* (Hoiland).

ரயில்வே ஸ்தலம்—*ஜெர்மனியிலுள்ள ஓபர்ஹாஸன்* (Oberhausen).

போக்குவரத்துகள், மின்சார ஸ்தாபனங்கள், ரயில் போக்குவரத்துகள்.—*ரைன்லாந்து* (Rhineland).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—*வடக்கு அல்பேனியா* (N. Albania).

கப்பல்கள்.—ஏட்ரியாடிக் (Adriatic).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—இலக்குகள்.—ஆஸ்திரியா (Austria).

இலக்குகள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf),

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்.—தெற்கு பாலு (S. Palu).

விமான நிலையங்கள்.—சைபான் (Saipan). டினியான் (Tinian).

பர்மா (Burma).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேமிக்கும் இடங்கள்.—ரங்கூன் (Rangoon).

பாலங்கள்.—லாஷியோ (Lashio), பாமோ (Bhamo), நாபா (Naba), மாலு (Mawlu)க்கு மத்தியில்.

3—11—44. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்.—தொழிற்சாலை.—பானிற்கு (Bonn), தெற்கு.

விமான நிலயம்.—டிரையருக்குக் (Trier), கிழக்கு.

எண்ணெய்க் கிணறுகள்.—ஹாம்பர்க் (Hamburg).

பாலங்கள்.—மோஸல் (Moselle) சமவெளி.

தொழிற்சாலை இலக்குகள்.—தென் ஜெர்மனி (South Germany), ஆஸ்திரியா (Austria).

போக்கு வரத்துகள்.—போ (Po), யூகோஸ்லாவியா (Yugoslavia), அல்பேனியா (Albania).

விமான நிலயம்.—ஷாக்ரெப் (Zagreb).

விமானச் சண்டைகள்.—கிழக்கு யுத்த அரங்கம் முழுவதும்.

இரவு.—விமான நிலயங்கள்.—மேற்கு ஜெர்மனி (Western Germany).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய சைனியங்கள்.—பிலிப்பைன்ஸிலுள்ள ஆர்மாக் (Ormac).

பர்மா (Burma).

எதிரி விமானங்கள்—தரைமீதுள்ள ஸ்தாபனங்கள்—முகாம்கள்.—பர்மா (Burma).

ரஸ்தா, தரையிலுள்ள படைகளுக்கு உதவி.—சிண்ட்வின் (Chindwin).

ரயில்வே தொழிற்சாலைகள்.—பாங்காக் (Bangkok).

விமான நிலயங்கள், போக்குவரத்துகள்.—தென் பர்மா (South Burma).

4—11—44. (சனிக்கிழமை).

ஜெர்மனியும், ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களும்.

பகல்—தொடர்ச்சியான எண்ணெய்க் கிணறுகள், வேலைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg), ஹனோவர் (Hanover), ஸார்பர்க்கன் (Saarbrucken).

ஸ்ப்மரீன் தொழிற்சாலை—யுட்ரட்சட் (Utrecht).

தொழிற்சாலையிலுள்ள நகரங்கள்.—போகம் (Bochum), ஸொலிங்கன் (Solingen).

விமானத் தொழிற் சாலைகள்.—ரீஜன்ஸ்பர்க் (Regensburg), மியூனிச் (Munich), ஆக்ஸ்பர்க்கு (Augsburg).

சேமிப்புகள்.—ஜார்கப் (Zagreb) மார்போர் (Maribour), ரயில் கார்கள் வடக்கு இதாலியில் (North Italy).

ரயில் பாலங்கள்.—பிரன்னர் பாஸ் (Brenner Pass), போ (Po) சமவெளி.

கப்பல்கள்.— ஏட்ரியாடிக் (Adriatic).

விமானச் சண்டைகள்—கிழக்கு யுத்த அரங்கம் முழுதும்.

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்—போக்கம் (Bochum), ஹனோவர் (Hanover).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.—போனின் (Bonin).

ஜப்பானிய முகாம்கள்.—ஆர்மாக் (Ormoc) லெய்டி (Leyte).

பர்மா (Burma).

ரயில்வே தொழிற்சாலைகள்.—இன்ஸன் (Insein).

துவியல்கள்.—டாங்குப் (Taungup).

எண்ணெய்க் கிணறு ஸ்தாபனங்கள்.—சாக் (Chauk).

சேமிப்புகள்.—ஹெகோ (Heho), கியாக் (Kyauk), படாங் (Padaung).

ரஸ்தா நதிப் போக்குவரத்து.—சிண்ட்வின் (Chindwin).

விமான நிலயங்கள் சேமிப்புகள்.—மத்திய பர்மா.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

30—10—44. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

31—10—44. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென் இங்கிலாந்து லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கையில்லை.

1—11—44. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East.)

அமெரிக்க சைனியங்கள்.—லெய்டி (Leyte).

2—11—44. (வியாழக்கிழமை) to

4—11—44. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain),

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

5—11—44 (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain),

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia.)

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

அமெரிக்க சைனியங்கள்.—

பிலிப்பைன்ஸிலுள்ள லெய்டி (Leyte).

யுத்தக் குறிப்புகள்.

ராஜீயமும் யுத்தமும். யுத்த முயற்சிக்கு ராஜீயம் குந்தகம் விளைவித்தபொழுதும், அதன் போக்கை வேறு வழியில் திருப்பிவிடக்கூடிய பொழுதும், தவிர மற்ற,சமயங்களில் இந்த பிரசுரம் ராஜீயத்தில் தலையிடுவதில்லை. இந்தக் கொள்கைக்கு ஏற்க இப்பொழுது (நவம்பர் 7.) பிரிடனிலும், அமெரிக்காவிலும் இருவகைப் பட்ட தோற்றங்கள் காணப்படுகின்றன. அமெரிக்காவில் ஜனாதிபதி தேருதல் நடைபெறுகிறது. பிரிடனில் சர்வகக்ஷி நிர்வாகம் பொதுத் தேருதலை ஒரு வருஷத்துக்கு அல்லது ஜெர்மனி முறியடிக்கப்படும் வரையில் ஏழு, எட்டு மாதத்திற்காவது ஒத்திவைத்துவிட்டது. ஜனநாயகத்தில் முற்போக்கான பிரிடனில் அநேகமாக பத்து வருஷங்களாக பொதுத் தேருதல் இல்லாமலிருந்தபோதிலும், அது இவ்விதமான முடிவுக்கு வந்திருச்கிறது. அமெரிக்காவில் யுத்த காலத்தில் இப்பொழுது இரண்டாவது தடவை ஜனாதிபதி தேருதல் நடைபெறுகிறது. தற்போதிய ஜன பிரதிநிதி சபையின் ஆயுளை நீடிக்க பிரிடிஷ் பிரதம மந்திரி சபையில் மசோதாவைஇரண்டாம் தடவை படித்தபொழுது யாதொருவரும் ஆக்ஷேபிக்காமலும், பிற்போக்குக்கக்ஷி தொழிலாளர் கக்ஷி, தாராளக்கக்ஷி ஒன்றுபட்டு இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள். பத்து வருடங்கள் சென்றுவிட்டபோதிலும் பிரிடிஷ் பிரதிநிதி சபை ஜரையை அடைந்துவிடவில்லை. சுதந்திரத்தையும் இழந்துவிடவில்லை. சபைக்கு தொழிலாளர் கக்ஷியின் டெபுடி தலைவரான மிஸ்ட்டர்கிரீவுன்ட் அறிவித்தபிரகாரம் பிரிடிஷ் கக்ஷிகள் தங்களுடைய ஊக்கத்தை கொஞ்சம்கூட இழந்துவிடவில்லை. கக்ஷித்தலைவர்கள் தங்களுடைய வித்தியாசங்களைத் திறம்படப் பாராட்டவும் தயாராக இருக்கிறார்கள்.

பிரிடன் செய்த முடிவின் புத்திசாலித்தனம் நன்கு புலப்படுகிறது. நெருக்கடியான சமயத்தில் நிர்வாகத்தை மாற்றுவதும், பொதுஜனத் தேருதலை நடத்துவதும் சாவதானமான நடவடிக்கையல்ல. மேற்கு ஐரோப்பாவும், பால்கன் நாடுகளும், அநேகமாக விடுவிக்கப்பட்ட போதிலும் ருஷ்யாவிலிருந்து எதிரி துரத்தியடிக்கப்பட்டாலும், இதாலியின் ஒரு பாகம் எதிரிகளில்லாமல் சுத்திசெய்யப்பட்டுவிட்டாலும் யுத்தம் ஜெயித்தாகிவிட்டதென்று நினைப்பது தவறாகும். நமக்கு அதிக வெற்றிகள் கிடைத்திருந்தாலும் நாம் இன்னும் வெகு தூரம் பாடுபடவேண்டும். எதிரிக்கு உதைகள் விழுந்தபோதிலும் அவன் இன்னும் நொருங்கிவிடவில்லை. நாஸிகள் உறுதியுள்ளவர்கள். ஜெர்மனியில் ராஜீயக் கலவரம் ஏற்படுமென்று நம்புவதற்கில்லை. ஜெர்மனி அதன் பொது மக்களைக் கடுமையாக அடக்கியாண்டு வருகிறது. ஜெர்மன் படைகள் துணிக்கப்பட்டாலும் கோரமாகப் போரை நடத்துகின்றன. இதே சமயத்தில் மாரிகாலத்தின் கொடுமையால் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது. ஐரோப்பாவில் போர் முடிவதற்கு வஸந்தகாலமும், வேனீர்காலமும் செல்லவேண்டியிருக்கும். தோல்வி ஏற்படும்போலிருந்த நிலமையை சமாளித்து வெற்றி கிடைக்கும்படியாகப் பாடுபட்ட சர்வ கக்ஷி நிர்வாகத்தை அதன் அலுவல்களை அது பூர்த்தி செய்யுமுன் வெளியேற்றுவது நியாயமற்றதாகும்.

தேருதலை ஒத்திவைப்பதற்கு மிஸ்ட்டர் சர்ச்சில் சில காரணங்களையும் வற்புறுத்தினார். அவைகளுக்கு அனுசரணையாக அட்லாண்டிக்கடல் தாண்டியுள்ள அமெரிக்காவில் சில சம்பவங்கள் நேரிட்டிருக்கின்றன. முதலாவதாக, யுத்த சமயத்தில் தேருதல் நடத்தினால் போர்முனையிலுள்ளவர்களுக்கு அநீதியை விளைவிக்கக்கூடியது. ஏனெனில் பொது ஜனங்களைப்போல, போர்முனையிலுள்ள ஸோல்ஜர்களும், மற்றவர்களும் தங்களுடைய வாக்

களிக்கும் உரிமையை உபயோகிக்கமுடியாது. அவர்கள் தான், அவர்கள் செய்த தியாகத்திற்காக முக்கியமாக வோட்டுச்செய்யவேண்டியவர்கள். இரண்டாவதாக, யுத்தம் நடைபெற்றுவருவதால் நாட்டிலுள்ளவர்கள் ஒன்றுபட்ட அபிப்பிராயத்துடன் அதில் மட்டும்தான் தங்களுடைய கவனத்தைச் செலுத்தவேண்டும். மூன்றாவதாக, தேருதலில் தவிர்க்கமுடியாத கக்ஷித்தலைவர்கள் ஒருவரை ஒருவர் தூஷிப்பதின் மூலம் யுத்த நடவடிக்கைகளும் குறைகூறப்படும். அதன் மூலம் யுத்த முயற்சி தளர்ச்சி பெற்றுவிடும்.

ராஜீயம் அவசியம். ஜனநாயகமும் முக்கியமானது, தேருதல்களும் நடைபெறவேண்டியதுதான். ஆனால் அவைகளுக்கு காலதேசவர்த்தமானம் உண்டு. மகத்தான எதிரியுடன் போர்புரியவேண்டியிருக்கும் சமயத்திலும் தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் போதும் இது அவசியமில்லை.

வி வி வி வி வி

அமெரிக்காவின் நடவடிக்கை. அமெரிக்காவில் இதற்கு எதிர் மறையான நடவடிக்கை காணப்படுகிறது. இன்று புதிய ஜனாதிபதிக்குத் தேருதல் நடைபெறுகிறது. இந்த யுத்தத்தில் இரண்டாவது தடவை தேருதல் நடைபெறுகிறது. இந்தத் தேருதலில் ஒரு முக்கியத்துவம் காணப்படுகிறது. போட்டிபோடும் இரு நபர்களும் எதிரிகள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும் வரையில் சோர்வன்னியில் போரை நடத்துவோமென்று சொல்லிவருகிறார்கள். பழைய தலைவருக்கும் அந்த ஸ்தானத்தை அபேக்ஷிக்கும் நபருக்கும் யுத்தத்தை நடத்தும் முறையில்தான் அபிப்பிராய பேதமிருக்கிறது. ஒரு நடவடிக்கையிலுள்ள குறைவு பாடுகளை அறியாததினால் அனுபவம் பெறாத புதிய நபர் போரை துரிதமாக நடத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறார். ஐந்து வருஷமாகப் போரை நடத்திவரும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இதற்குமேல் அதிகவேகமாகப் போரை நடத்தக்கூடாதென்று அறிவார். நவம்பர் 3-ம் தேதியன்று அவர் பின்வருமாறு சொன்னார்.

'யுத்தத்தில் வெற்றிபெறுவதில் நமக்கு அதம பக்ஷமான உயிர் சேதம்தான் ஏற்படக்கூடியபடி நாம் உத்தரவாதம் செய்யவேண்டும். அதற்காக ஒவ்வொரு இடத்திலும் நமது படை பல ஆதிக்கமிருக்கவேண்டும். ஜூன் மாதத்தில் பிரான்ஸில் படைகள் காலடிவைத்த 10 வாரங்களுக்குள் நாம் நார்மண்டி கடற்கரையில் 2,00,000 துருப்புகளையும், 20 லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள சர்பராக்களையும், 5 லக்ஷம் மோட்டார்களையும் இறக்கியிருக்கிறோம்.'

இந்தப் புள்ளிவிவரங்கள் அபாரமானவை. இவ்வளவு சர்பராக்களையும் திரட்டவும் கொண்டுபோகவும் வேண்டும். காலஹரணம் ஏற்பட்டால் யுத்த நடவடிக்கை மெதுவாக நடைபெறுகிறதென்று அர்த்தமில்லை. அந்தக்காலம் ஆயத்தம் செய்வதற்கு அவசியமாகும்.

மேலும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னதுபோல கடல் தாண்டி ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் நமக்கு போர் சாவதானமாகவும், விபத்துக்குட்பட்டும், எதிரிகளின் தாக்குதலுக்குட்பட்டும்தான் நடைபெறவேண்டும். மேலும் பிரதேச அமைப்பும், பருவகால அசௌகரியங்களும் இன்னல்களை விளைவிக்கக்கூடும். யுத்தம் நடத்துவதும் மிகவும் சிரம சாத்தியமான வேலையாகும். ஆகிலும் ஜனாதிபதி ஸ்தானத்துக்கு அபேக்ஷகராகயிருக்கும் மிஸ்டர் டூயி ஜனாதிபதி ரூஸ்வெலட் பேரில் குற்றம் சாட்டுகிறார். [இதை எழுதியபின் ஜனாதிபதி தேருதல் முடிந்துவிட்டது. ரூஸ்வெல்ட் மறுபடியும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்.—முதல் பக்கம் பார்க்க—பத்திராதிபர்].

வி வி வி வி வி

பிரிடிஷ் ரக்ஷகப்படையும், ஜெர்மன் உள்நாட்டுப் படையும். இவ்விரண்டும் எதிர் முறையான ஸ்தாபனங்கள். 1940-ம் வருஷத்தில் பிரிட்டனையும், உலகத்தையும் காப்பாற்ற ஏற்பாடு செய்யப்பட்ட பிரிடிஷ் பொது ஜனங்கள் கொண்ட பிரிடிஷ் உள்நாட்டு ரக்ஷகப்படை, வெற்றி சமீபத்துவிட்டதால் இனிமேல் அவசியமில்லையென்று கலைக்கப்பட்டுவிட்டது. ஜெர்மனியில் யுத்தத்தில் தோல்வி ஏற்படும் என்று தோன்றிவிட்டபின், உள்நாட்டு ரக்ஷகப்படை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது போலிப்படை என்றுதான் சொல்லவேண்டும். பிரிடிஷ் படை போர் முனையிலுள்ளவர்களுக்கு ஆறுதலளிக்க அமைக்கப்பட்டது. ஜெர்மன் படையைச்சேர்ந்தவர்கள் போர் முனையிலுள்ள படைகளுக்கு பர்த்தியாகச் செல்லவேண்டும். அதிலுள்ள பொது ஜனங்கள் பயிற்சிபெறவில்லை, மூஸ்தீப்புகளைப் பெறவில்லை. டாஸ்ரெக் என்னும் பத்திரிகையில் சொல்லப்படுவதுபோல் தோல்வி ஏற்படும்பொழுது ரக்ஷகப்படைக்கும் சிக்ஷை ஏற்படுமென்று

நாஸிகளுக்கு பீதியுண்டாகியிருக்கிறது. ஹேக் ஒப்பந்த ஆசாரப்படி இந்தப்படை போர்ப் படையல்ல.

பிரிடனில் உள்நாட்டு ரக்ஷகப்படை கலைக்கப்பட்டபோதிலும் அது மறைந்துவிடவில்லை. இனிமேல் ஒத்திகையும் கவாத்தும் அவசியமில்லாத போதிலும் அவர்கள் ஊதியமன்னியில் வேலை செய்துவருவார்கள். சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது அவர்கள் நடவடிக்கையைத் துவக்கி எதிரியைத் திணறும்படி செய்துவிடுவார்கள்.

வி வி வி வி வி

நடுநிலைமை வகிக்கும் நாடுகள். நாஸிகளின் துரதிருஷ்டம் இப்பொழுது தெளிவாக புலப்படுகிறது. நடுநிலைமை வகித்த நாடுகள் இப்பொழுது நடுநிலைமையைத் துறந்துவிடுகின்றன. நார்வேயிலும், டென்மார்க்கிலும் ஜெர்மன் படைகளிருப்பதால் அதற்கு அபாயம் ஏற்படக்கூடுமென்று அறிந்துகொண்ட ஸ்வீடன் யுத்த குற்றவாளிகளுக்கு அடைக்கலமளிப்பதில்லை என்று அது சொல்லியிருந்த வாக்குறுதியை நேச தேசத்தாருக்கு மறுமுறை ஞாபகப்படுத்துகிறது. நாஸிகளுடனுள்ள பாந்தவ்யத்தை புறக்கணித்துவிட்டு சமாதான மகாநாட்டில் ஸ்தானம் வேண்டுமென்று ஸ்பெயின் கோருகிறது. அநேக யுகங்களாகக் கொண்டிருந்த ஜனநாயக கலைஞானத்தை மறந்து ஜெர்மனியுடன் நட்பு கொண்டிருந்த ஸ்விட்ஸர்லாந்து ருஷ்யாவுடன் ராஜதந்திரப்பேச்சுகளைத் துவக்க ஆசைப்படுகிறது. ருஷ்யா இதற்கு மறுதளித்துவிட்டது.

வி வி வி வி வி

மார்ஷல் ஸ்டாலினின் சொற்பொழிவு. ருஷ்யாவின் அக்டோபர் மாதப் புரட்சியின் 27-வது ஆண்டு விழா தினமாகிய நவம்பர் 6-ம் தேதியன்று ஸ்டாலின் ஆற்றிய சொற்பொழிவு மிகவும் நுண்ணறிவும், உண்மை போதமும் உள்ளது. ஓநாய் ஆடுகளைத் தின்பதினால்தான் அதை நாம் கொல்லுகிறோம். பிரான்ஸ், யூகோஸ்லாவியா, போலந்து, செகோஸ்லாவேகியா, கிரீஸ், பெல்ஜியம், நார்வே, ஹாலந்து முதலிய அடிமைப்பட்ட நாடுகளுடன் ஜெர்மனிக்கு ஆதீனமான இதாலி, ருமேனியா, பல்கேரியா, பின்லாந்து முதலிய நாடுகளும் ஜெர்மனியுடன் போர் தொடுத்துவிட்டன. இந்த அற்புதமான மாறுதலுக்கு அச்சுநாட்டார் ஜாதி உயர்வுமூலம் தலைகொழுத்து நிற்பதுதான் காரணம். ருஷ்யாவிலும், பிரான்ஸிலும், பிலிப்பைன்ஸிலும், பர்மாவிலும் அச்சு வல்லரசுகள் ஆரம்பகாலத்தில் வெற்றிபெற்றதற்கு அவர்களின் இயற்கையான வலு மிகுதிகாரணமல்ல. அவர்கள் அநேக வருஷங்களாகத் தயார்செய்து வந்ததும், சமாதானத்தை விரும்பும் நேசதேசத்தார்கள் யாதொரு ஆயத்தமும் செய்யாமலிருந்ததும்தான் காரணங்களாகும்.

வி வி வி வி வி

டெகரான். ஸ்டாலினின் சொற்பொழிவில் காணக்கூடிய மற்றும் இரண்டு விஷயங்களைக் கூறுவோம். டெகரானில் நிறுவப்பட்ட இரண்டாம் போர் முனையின் திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்ததென்றும் அவன் கூறினான். அவன் சொன்னதாவது :—

"ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனையைத் துவக்கி ஜெர்மனியின் 75 டிவிஷன் படைகளை அங்கு போர் புரியும்படி செய்திராவிடில், நமது படைகள் ஜெர்மன் எதிர்ப்பைக் குலைத்து அவர்களை ருஷ்ய பூமியை விட்டு இவ்வளவு சீக்கிரத்தில் அப்புறப்படுத்தியிருக்க முடியாது.''

அதே விதமாக இந்த வேனீர் காலத்தில் செம்படை பலமாகத் தாக்கியிராவிட்டால் நேசதேசப் படைகளும், ஜெர்மன் படைகளைப் பின்காட்டி ஓடும்படி செய்து பிரான்ஸையும் பெல்ஜியத்தையும் விடுவித்திருக்க முடியாது.

மேலும் டெகரான் மகா நாட்டில் யுத்தத்தை சீக்கிரத்தில் முடிப்பதற்கும், யுத்த தந்திரம் நிறுவப்பட்டதென்றும் ஸ்டாலின் குறிப்பிட்டார். கிடைத்த லாபங்களை விடாப்பிடியுடன் காப்பாற்றவேண்டும். எதிரியையும் கிடுக்கியில் கெட்டியாகப் பிடித்துவிடவேண்டும். இதுதான் வெற்றிக்கு முக்கியம். இதற்காக பிரிடன், ருஷ்யா, அமெரிக்காவின் ஒற்றுமை பலப்படுத்தப்படும். க்வீபெக்கிலிருந்து மாஸ்கோவுக்கு மிஸ்ட்டர் சர்ச்சில் சென்றதும் இந்த நோக்கத்துடன்தான்.

டம்பார்டன் ஓக்ஸ் மஹாநாடு. ஸ்டாலினுடைய சொற்பொழிவில் ஒரு எச்சரிக்கையும் காணப்படுகிறது. ஜெர்மனி மறு யுத்தத்துக்குத் தயார் செய்துவருகிறது. ஜெர்மனியை நிராயுதபாணியாக்குவதுடன் மூன்று வல்லரசுகளும் படை பலத்தை வைத்திருக்கவேண்டும். டம்பார்டன் ஓக்ஸில் நடைபெற்ற உலக பத்திர மஹாநாடும் இந்த முடிவுக்குத்தான் வந்தது.

வி வி வி வி வி

சிறந்த நடவடிக்கை. யுத்தத்தில் வெற்றி பெறுவது உயர்வான நடவடிக்கையாகும். வெற்றி நம்முடையதென்பதில் ஐயமில்லை என்றார் ஸ்டாலின்.

“நேசதேசப் படைகளுடன் ஒன்றுபட்டு செம்படை ஜெர்மன் நாஸிப் படைகளை முறியடிக்கவும், நாஸி மிருகத்தை அதன் குகையிலேயே கொல்லவும், பெர்லின் பேரில் வெற்றிக் கொடியை நாட்டவும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. இந்த முடிவு சமீப எதிர் காலத்திலேயே ஏற்படும்.”

வி வி வி வி வி

அறிகுறிகள். வெற்றி சீக்கிரம் கிடைத்துவிடுமென்பதற்கும் அறிகுறிகள் தோன்றுகின்றன. அவைகளில் முக்கியமானவை.

(1) ஜனாதிபதி பெனஷும் அவருடைய நிர்வாகமும் சில வாரங்களுக்குள் செகோஸ்லாவேகியாவுக்குத் திரும்பி வந்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(2) துருக்கியில் விளக்கணைப்புக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன.

(3) ஹிட்லர் ப்ரீஸியன் அணையைக் கட்டத் துவங்கிவிட்டான்.

(4) ஹிம்லர் மறு முறை சேனைகளைச் சுத்தி செய்ய ஆரம்பித்துவிட்டான். இந்தத் தடவை கைத்தொழில் முதலாளிகள் இரையாகிவிட்டார்கள். அவர்களில் ஐந்து பேர்கள் பேரில் பொதுஜனக் கோர்ட்டில் நாச வேலைக்காகக் குற்றம் சாட்டப்படும். அவர்களால் உபரியாக உற்பத்தி செய்யக்கூடவில்லையென்பதுதான் அவர்கள் செய்த தவறு. இதற்குக் காரணம் அநேக தொழிலாளர்கள் ரக்ஷகப் படையில் சேர்க்கப்பட்டுவிட்டார்கள். தினசரி கவாத்துக்குப்பின் அவர்களுக்கு உபரியாக வேலை செய்ய சக்தி கிடையாது.

(5) ஜெர்மனியில் எஃகுக் குறைந்துவிட்டதால் 70 தொழிற்சாலைகளில் 5 லக்ஷம் வேலைக்காரர்கள் விஷவாயு, விஷத் தூள்களை உற்பத்திசெய்து நேசதேசத்தார்களின் பேரில் பிரயோகம் செய்ய முயற்சி செய்யப்படுகிறது.

(6) இதே லக்ஷியத்துடன் ஜெர்மனி அங்கஹீனம் பட்டவர்களையும், காயம்பட்டவர்களையும், மூடவர்களையும், செவிடர்களையும், குற்றவாளிகளையும் அயோக்கியர்களையும் சேர்த்துப் படை திரட்ட முயற்சி செய்துவருகிறது.

வி வி வி வி வி

மேற்குப் போர்முனை. தென் மேற்கு ஹாலந்துக்கான போர் நடைபெற்று வருகிறது. வால்சர்ன் தீவு விடுவிக்கப்பட்டது ஆண்ட்வெர்ப்புக்குப்போகும் வழி அநேகமாக திறக்கப்பட்டு விட்டது. ஆண்ட்வெர்ப்பின் முக்கியத்துவத்தை எதிரிகளே ஒப்புக்கொள்ளுகிறார்கள். வான்சாங்கன் பின்வருமாறு சொல்லுகிறார். “யுத்தத்தை எதிர் காலத்தில் நடத்த ஆண்ட்வெர்ப்புக்குப் போகும் மார்க்கத்தை அவசியம் தற்காப்பு செய்யவேண்டும். இது மிகவும் கஷ்ட சாத்தியமான வேலையாகும். ஷெல்ட் அரண்களை எதிரிகள் கைப்பற்றிவிட்டால் பிரிடிஷ் படைகள் ஏராளமான படைகளையும், சர்பராக்களையும் குவித்துக்கொண்டு வடக்கு ஜெர்மனி பீட பூமியையும், பெர்லினையும் பலமாகத் தாக்கி அழித்துவிட முடியும்.

இந்தப் பிராந்தியப் போரில் ஆண்ட்வெர்ப் துறைமுகத்தைக் கைப்பற்றுவதுடன், போர் முனைக்கு சர்பராக்களைக் கொண்டுபோக பெல்ஜியத்திலுள்ள ரஸ்தாக்களையும், இருப்புப் பாதைகளையும் உபயோகமுள்ளதாகச் செய்யவேண்டுமென்பதுதான் பிரிடிஷ் படைகளின் நோக்கம். விடுதலைக்குமுன் நேசதேச வெடிகுண்டு வீச்சினாலும், விடுதலையின்போது மாக்விப் படையின் நடவடிக்கையினாலும், ஆக்கிரமண காலத்தில் எதிரியின் நாச வேலையாலும், பிரெஞ்சு இருப்புப்பாதை அமைப்புகள் பாழாகிப் போய்விட்டன. பெல்ஜியம் துரிதமாக மீட்கப்பட்டதால் அதன் போக்குவரவு மார்க்கங்கள் அழிக்கப்படாமலிருக்கின்றன. பிரெடா—டில்பர்க்—ஷெர்டோகென்பாஷ் முக்கோணத்தை சுத்தி செய்யத்தான் பிரிடன் இப்பொழுது போர் புரிந்து வருகிறது. இந்த முக்கோணத்தில் ஏராளமான இருப்புப் பாதை

களும், ரஸ்தாக்களும் இருக்கின்றன. தெற்கு ஹாலந்துக்கும், ஜெர்மனிக்கும் இதன் மூலம் தான் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது.

இவ்விதமாக தென்மேற்கு ஹாலந்திலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தியடிக்கவும் அங்கிருந்து ரூருக்குள்ளும், சாருக்குள்ளும் போகவும் நிஜமேகன் முன்னணி ஸ்தலம் விரிவாக்கப்படுகிறது.

வி வி வி வி வி

கிழக்குப் போர்முனை. செம்படை புடாபெஸ்டுக்குள் நுழைந்துவிட்டது. ஆண்ட்வெர்ப்பு போரைப்போல் புடாபெஸ்டுக்கான போரும் போக்குவரத்து மார்க்கங்களுக்காகத்தான் நடைபெறுகிறது. வியன்னாவுக்குப் போகும் இருப்புப் பாதைகளும், ரஸ்தாக்களும் புடாபெஸ்டிலிருந்து புறப்படுகின்றன. புடாபெஸ்ட் ருஷ்யர் வசமாகிவிடில் ஜெர்மனிக்குப் போகும் மார்க்கம் குறுகிவிடும்.

வி வி வி வி வி

கிரீஸ். கிரீஸ் பூராவும் விடுவிக்கப்பட்டது.

வி வி வி வி வி

இதாலியப் போர். இதாலிய நடவடிக்கைகள் முக்கியமானதல்லவென்று நினைக்கிறவர்கள் நவம்பர் 2-ம் தேதியன்று ஜெனரல் அலெக்ஸாண்டர் விடுத்த யுத்த விமர்சனத்தை கவனித்துப் பார்க்கவேண்டும். காசினோவிலிருந்து ரோமுக்கு முன்னேறி ஆறு மாத நடவடிக்கையில் 15 ஜெர்மன் டிவிஷன்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இதாலியில் படைகளிறங்கியபின் நேச தேசப் படைகள் 600 மைல்கள் முன்னேறியிருக்கின்றன. இதாலியில் 51,000 சதுர மைல்கள் மீட்கப்பட்டன. அது தினசரி $1\frac{1}{2}$ மைல் கணக்காகுகிறது.

இரண்டாவது போர் முனையை ஏற்படுத்தி ஏராளமான ஜெர்மன் படைகளைத் தாக்கி எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவது என்ற எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. ரோம் விடுதலையான பின் நார்மண்டியில் படைகளிறங்கின. இதாலியில் ஜெர்மன் படைகளைத் தேக்கி வைத்திருந்ததன் மூலம் பிரான்ஸில் ஜெர்மன் தற்காப்பு பலஹீனமடைந்துவிட்டது.

வி வி வி வி வி

யுத்தத்துக்குப்பின் திட்டங்கள். பம்பாயில் அக்டோபர் 27-ம் தேதியன்று ஸர் ஆர்தேஷீர் டலால் பேசியதிலிருந்து யுத்தத்துக்குப் பிந்திய உலக சீர்திருத்த திட்டம் நிறுவும் கட்டத்தைத் தாண்டி உருவான முடிவுகளைச் செய்யும் நிலைமைக்கு வந்துவிட்டதென்று தோன்றுகிறது. பயிற்சி பெற்ற ஏராளமான மாணவர்கள் பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் அனுப்பப்படுவார்கள். மாகாணங்களும், ஸமஸ்தானங்களும், இந்திய நிர்வாகமும், கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ளுவார்கள். அமெரிக்காவில் உள்ளதுபோல் பொதுவான மின்சார சக்தி திட்டம் அமைக்கப்படும். அரசாங்கத்தார் தேசத்திலிருந்து ஐந்து வருஷத்திற்கு ரூ. 1,000 கோடியைக் கொடுத்துதவுவார்கள். தனிப்பட்டவர்களும் அவ்வளவு தொகையைக் கொடுத்து உதவவேண்டும். ஸர் ஆர்தேஷீர் டலால் பின்வருமாறு சொன்னார். "பொருளைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. சாமான்களும், பயிற்சி பெற்ற வேலைக்காரர்களும் பொருளைப் பயன்படும்படியாக உபயோகிக்கும் சக்தியும் தான் சிறிது சங்கடத்தை விளைவிக்கும்.

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த நடவடிக்கை. அனுமதி பெறுமல் புதுக்கோட்டையிலிருந்து பாலையும், ரோமத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதென்றும் தடைசெய்தும், இறக்குமதி செய்யப்படும் காகிதத்தின் விலையை நிர்த்தாரணம் செய்தும் புதுக்கோட்டை நிர்வாகம் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள்.

கிழக்குப் பிரஷ்யாவின் தற்காப்புகள்.

1939-ம் வருஷத்தில் ஜெர்மனியின் எண்ணம்.

இப்பொழுது ஒலிபெருக்கும் லெப்டினண்ட் ஜெனரலாகவும், அப்பொழுது கர்னலாகவும், கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள இஞ்சினியர்களின் சார்ஜ் வகித்தவருமான டிட்மார் 1939-ம்

வருஷத்தில் இந்தக் கட்டுரையை எழுதினர். இது 1939-ம் வருஷம் மே மீ டைவேர்மாட் என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நியூஸ் கிரானிகின் பத்திரிகை அதை அனுமதியன்னியில் மறுபடியும் பிரசுரித்திருக்கிறது.

டான்ஸிக் காரிடார் சம்பந்தமாக போலந்துடன் வியவகாரம் என்ற முறையில் சமீப ராஜீய சம்பவங்கள், ஜெர்மனியின் கிழக்கு எல்லைச் சரகத்திலுள்ள ராணுவ நிலைமையைக் கவனிக்குமாறு பொது ஜனங்களின் கவனத்தை இழுத்துவிட்டன. ராணுவ அவசியத்தை உத்தேசித்து கிழக்குப் பிரஷ்யாவில் பலமான தற்காப்புகள் அமைக்கப்படவேண்டும்.

பூகோள அமைப்பினுல் கிழக்குப் பிரஷ்யா இயற்கையான தற்காப்புகள் உள்ளது. அதன் ஏரிகளும், காடுகளும் படை எடுப்பவர்களுக்கு இன்னல்களை அளிக்கக்கூடும். இந்த இயற்கையான தற்காப்புகளை நவீன தற்காப்புகளைக்கொண்டு பலப்படுத்துவதுதான் நமது திட்டம். தற்காப்பு அமைப்பில் தலைநகரமான கோனிக்ஸ்பர்க் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும். கோனிக்ஸ்பர்க்கும், அதன் துறைமுகமான பில்லாவும் அந்த மாகாணத்திற்கு வாயிற்படி போன்றது. 1932-ம் வருஷத்தில் கோனிக்ஸ்பர்க் கோட்டையை விரிவுப்படுத்த வேலை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு மேற்கிலும், கிழக்கிலும் உள்ள பார்சுவங்கள் பால்டிக் கடலிலுள்ள 'பிரிஷி, குருஷிஹாப்' என்ற வளைகுடாக்களுக்குள் செல்லுகின்றன.

கோனிக்ஸ்பர்க்கின் மேற்கு, தெற்கு, கிழக்கு மூலைகள் ஹெய்ல்ஸ்பர்க் ஸ்தானம் என்று பிரசித்தி பெற்று விட்டன. ஹெய்ல்ஸ்பர்க் என்ற நகரத்தின் பெயர் வார்ஸேல்ஸ் ஒப்பந்தப் படி ஹெய்ல்ஸ்பர்க் பிராந்தியத்தில் மட்டும் தற்காப்புகளை அமைத்துக்கொள்ளலாமென்று சொல்லியதை ஞாபகப்படுத்துகிறது. இந்த தற்காப்பு ஸ்தானங்கள் 125-மைல்கள் வரையில் பரவியிருக்கின்றன. பெரிய காடுகள் இயற்கையான மறை பொருளாக இருக்கின்றன.

இந்த ஸ்தானங்களை தாக்குவதற்குப் படைகளைக்குவிக்க உபயோகிக்கலாம். அநேக காடுகள் உள்ள மாகாணத்தின் மேற்குப் பக்கத்தில் உள்ள பிராந்தியம் துருப்புகள் ஒளிந்து கொள்வதற்கு சிலாக்கியமான இடங்களாக இருக்கின்றன. அவைகளுக்கு ஏராளமாகக் கோட்டைகளிருக்கின்றன. இந்தக் கோட்டைகள் கோனிக்ஸ்பர்க்கிலுள்ள கோட்டைகளின முன்னணி தளங்கள்.

அவைகளில் முக்கியமானதும் புராதனமாக உள்ளதும், இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டதுமான லோயட்ஸான் என்ற கோட்டை. லோயட்ஸானைச் சுற்றிலும் அநேக பெரியதும் சிறியதுமான ஏரிகளிருக்கின்றன. மிகவும் குறுகலான பாலங்களை உடைய இந்த ஏரிக் கூட்டங்கள் கிழக்கிலிருந்தும்,தெற்கிலிருந்தும் கிழக்குப்பிரஷ்யாவுக்குள் நுழையும் எதிரிப் படைகளைப் பிரித்து விடும். இந்த உண்மை 1914-ம் வருஷத்தில் நிதர்சனம் செய்யப்பட்டது. 1914-ல் இந்த இயற்கை இன்னல்களின் உதவியைக்கொண்டு தான் ஜெர்மனி உள்நாட்டு தற்காப்புகளில் போர்புரிய முடிந்தது. ஆகிலும் 1914-ல் லோயட்ஸான் கோட்டை இந்தப் பாலங்களை ஜெர்மன் படைகள் உபயோகிக்கும்படி செய்ய சமாளிக்க முடியவில்லை.

இன்று நிலைமை மாறி விட்டது. குறுகலான தரைப் பாலங்களுக்கு முன் பலமாக கோட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோட்டைகளுக்கு முன் உள்ள பிரதேசம் பூராவும் சகலவிதமான இடையூறுகளால் நிரப்பப்பட்டிருப்பதால் எதிரிகள் சுலபமாக படைகளைச் சலனம் செய்ய முடியாது. கிழக்குப் பிரஷ்யாவில் துரிதமாக முன்னேறுவதும் சாத்தியமானதல்ல.

கிழக்கு பிரஷ்யாவிலுள்ள பொது ஜனங்கள் அதன் கோட்டைகளை நம்பியிருக்கலாம். அங்கு படையெடுக்கும் எதிரி இவைகளையும் பொருட்படுத்தி நன்ருய் ஆலோசனை செய்ய வேண்டியதுதான். கிழக்குப் பிரஷ்யா ஜெர்மனியின் எல்லைச் சரக தற்காப்புத்தான். ஆனல் அது ஜெர்மனியின் ஊக்கமான போருக்குக் கடைசியான கேந்திர ஸ்தனாமல்ல.

பால்கன் நாடுகளில் ருஷ்ய முன்னேற்றம்.

துருக்கியில் விளைவுகள்.

(லியோனுர்ட் கிர்ஷென்).

ருமேனியா சரணடைந்த பின் ருஷ்யர்கள் பால்கன் நாடுகளிலுள்ள ஜெர்மன் தற்காப்புகளை ஊடுருவிச்சென்று விசிறிபோல் பரவ ஆரம்பித்து அநேக வாரங்களாகி விட்டன. இந்தப்புதிய நடவடிக்கை தென்கிழக்கு ஐரோப்பாவின் நிலைமையை அநேக நூற்றாண்டுகள்

வரையில் பாதிக்கக்கூடியது. எதிர் காலத்திய நடவடிக்கைகள் முதலில் ஏற்படும் தோற்றங்களையும் நடவடிக்கைகளையும் பொருத்ததாகும்.

உலக முதல் யுத்தத்தின் பிற்பாதியில் ருஷ்யப்படைகள் நேசநாடுகள் என்ற முறையில் ருமேனியாவுக்குள் நுழைந்ததைத் தவிர 1877–1878-ம் வருஷத்திற்குப்பின் பால்கன் நாடுகளுக்குள் ருஷ்யப் படைகள் பிரவேசிக்கவில்லை. மற்ற பால்கன் நாடுகளும், முக்கியமாக டிரான்ஸில்வேனியாவும், யூகோஸ்லாவியாவும் ருஷ்யப்படைகளைப் பார்த்ததேயில்லை. ருஷ்ய ஆக்கிரமணத்தையும் துருக்கி அறிந்ததில்லை. துருக்கியின் மேற்குக்கோடியிலும், கிழக்குக்கோடியிலுமுள்ள எல்லைச் சரகங்களில் போர் புரிந்ததைத் தவிர ருஷ்யாவுடன துருக்கியில் ஒரு போரையும் துருக்கி நடத்தியதில்லை. ஆகையால் ருஷ்யாவின் முன்னேற்றமும், ஆக்கிரமணமும் நூதனமாக இருக்கின்றன. பத்திரிகாசிரியர்களும், ஆசிரியர்களும், சரித்திரக்காரர்களும் ருஷ்ய சேனையை ஜீவனற்ற, சக்திபெற்ற, இரக்கமற்ற பெரிய நீராவி உருளையென்றும் முன்னேறும்பொழுது அதன் மார்க்கத்திலுள்ள எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கி விடுமென்றும் வர்ணிக்கிறார்கள். ஆகிலும் ருஷ்ய சேனைக்கு எப்பொழுதும் புத்தி, சக்திஉண்டு.

இப்பொழுது இந்த ருஷ்ய சேனை பால்கன் நாடுகளுக்குள் வந்து விட்டது. அது ருமேனியாவையும், பல்கேரியாவையும் ஆக்கிரமித்து விட்டது. ஸெக்கோஸ்லாவியாவை விடுவிக்கப்போகிறது. யூகோஸ்லாவியாவுக்குள், புகுந்து விட்டது. புடாபெஸ்டையும், வியன்னாவையும் நோக்கியும் முன்னேறிவிடும். ருஷ்ய சேனை போகும் இடங்களிலெல்லாம் அழிவையும், ஏழ்மைத்தனத்தையும், அராஜகத்தையும் உண்டு பண்ணிவிடுமென்று ஜெர்மானியர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஜெர்மானியர்களுக்கு வேறுவிதமான தோற்றம் ஏற்படாது. உயர்தர ஜாதியென்றும் இரு அர்த்த கோளத்திலும் நாகரீகம் படைத்த நாடென்று பெருமைகொண்ட ஜெர்மனிதான் ஜெர்மனி வர்ணிக்கும் ருஷ்யாவைப்போல் நடந்து கொண்டிருக்கிறது.

ருஷ்ய சேனை.

நாம் உண்மையைச் சொல்லுவோம். செம்படை அன்பு மிகுந்த பாதிரிகள் அல்ல, அல்லது அமைதியுள்ள தேவதைகளல்ல. அது ஒரு சேனை. அது போர் புரிகிறது. கஷ்டங்களை அனுபவித்திருக்கிறது. குடும்பத்தார்களும் ஜெர்மனியின் ஆக்கிரமணத்துக்குட்பட்ட குடும்பங்களும் அநேக கஷ்டங்களுக்காகியிருந்தார்களென்ற அறிவுடன் செம்படை அநேக துன்பங்களுக்குள்ளாகியிருக்கிறது. தேசாபிமானம், மற்றெல்லா நாடுகளையும்விட ருஷ்யாவில் அதிகம். ருஷ்ய சரித்திரத்திலேயே ஒருவராலும் அது முறியடிக்கப்படவில்லை. அப்பேர்ப்பட்ட ருஷ்யர்களின் சேனைதான் இன்று பால்கன் நாடுகளுக்கு வந்திருக்கிறது. அவர்கள் மன்னிப்பு செய்ய வரவில்லை. அவர்கள் அதிக கஷ்டங்களை அனுபவித்திருப்பதால் அவர்களில் சாதாரணமானவர்களுக்கு பிறரின் உணர்ச்சியை அறியும் சக்தி ஏற்படவில்லை. அவர்களுக்கு கடமைதான் பலமான கொள்கை. டான்நதி பிரதேசத்திலிருந்த ருஷ்ய குதிரைப் படைகள் ஒரே மூச்சாக ஸ்டாலின் கிராட்டிலிருந்து கார்பேதியன் மலைகளின் கணவாய்க்கு வரும்பொழுது ருஷ்ய கிராமங்கள் வழியாகவும் வந்திருக்கிறார்கள். வெற்றித்தோற்றம் ஏற்பட்டபோதிலும், மிகுந்த மனவருத்தத்துடன் ருஷ்ய ஸோல்ஜர் தன்னுடைய பிரதான கிராமத்தின் வழியாகச் சென்றிருக்கிறான். அவன் மனைவியை குதிரையிலிருந்த படியே முத்தமிட்டான். குழந்தைகளை வாரி அணைத்தான். அவர்களிடம் தன்னுடைய பிரதாபங்களை எடுத்துரைத்தான். அதன்பின் சற்றுத் தயங்கிவிட்டு பின்னும் வெற்றிகளைப்பெறவோ அல்லது உயிர் துறக்கவோ அவன் புறப்பட்டு விட்டான்.

இப்பேர்ப்பட்ட ருஷ்யர்கள் ஐரோப்பாவில் எந்த நாடுகளையும்விட அதிகமாக கஷ்டங்களுக்குள்ளான பால்கன் நாடுகள் வழியாக முன்னேறுகிறார்கள். ஜெர்மானியர்கள் அவர்களைப்பற்றி அவதூறு சொல்லுகிறார்கள். ஹோராஸ் இவ்விதம்தான் விவரித்திருப்பான். ஆனால் பின்வாங்கும் ஜெர்மானியர்களுக்கும் பீதி உண்டாகி விட்டது.

ருமேனியாவின் ஆக்கிரமணம்.

ருமேனியாவும் பல்கேரியாவும், ருஷ்ய ராணுவ ஆக்கிரமணத்தினால் எவ்விதம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ருமேனியாவில் மாறுதல் சகஜமாகவே வந்து விட்டது. ருமேனியர்கள் தங்களுடைய நடவடிக்கைகளைச் சரியான முறையில் நடத்தி வந்தார்கள். ஜெர்மானியர்கள் தான் அநாகரீகமாக புகாரெஸ்டை நான்கு நாட்கள் வரையில் இடைவிடாது வெடிகுண்டுகளால் தாக்கி விட்டார்கள். இந்த நான்கு நாட்களில் நேசதேச பகல், இரவு விமானத் தாக்குதல்கள் நான்கு மாதங்களில் விளைவித்ததைவிட அதிக நஷ்டம் ஏற்பட்டது.

செப்டம்பர் 1-ம் தேதியன்று நேசதேச பத்திரிகாசிரியர்கள் புகாரெஸ்டுக்குச் சென்றார்கள். ருஷ்யத் துருப்புகள் புகாரெஸ்டுக்குள் நுழைந்த பின்னும் அவர்கள் எப்பொழுதும் போல வேலைசெய்து வந்தார்கள்.

ருமேனியா கையெழுத்திட்ட யுத்த நிறுத்த ஷரத்துகளும் சாதாரணமானவைகள்தான். வெறும் யுத்தத்திலிருந்து சுலபமாக விலகிக்கொள்ள முடியாது. புகாரெஸ்டிலும், மற்ற இடங்களிலும் அமைதி நிலவுகிறது. ருமேனியர்களே ஆக்ஷிபுரிகிறார்கள். அவர்களின் ராணுவமும், நிர்வாகமும், இலாகாக்களும் வேலைசெய்து வருகின்றன. அவர்களே யுத்தக் கைதிகளைக் கைது செய்கிறார்கள். அவர்களுடைய தவறுதல்களுக்காக வருந்தும் முறையில் அவர்கள் ஒரு சிறிது செய்துவருகிறார்கள். ருஷ்யர் அவர்களை நம்பி அவர்கள் செய்துவருவதை ஆமோதித்து வருகிறார்கள். ஜெர்மானியர்களின் நடவடிக்கையையும் இதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஜெர்மனி சொன்ன பிரகாரம் ருஷ்யர்கள் ருமேனியாவின் உள்நாட்டு வியவகாரங்களில் தலையிட்டிருக்கிறார்களா? கொள்ளையடிப்பதும் அராஜகமும் காணப்படுகின்றனவா?

பல்கேரியாவின் நடவடிக்கை.

பல்கேரியாவின் நடவடிக்கைகளை ஆராய்ச்சி செய்வோம். கிமான் ஜார்ஜியட்டின் முயற்சிக்குப் பின் ஸோபியாவில் உணர்ச்சி அதிகரித்து விட்டது. கையை மூடிக்கொண்டு வந்தனம் செய்வதும், சிகப்பு வர்ணமுள்ள அடையாளத்தை அணிந்து கொள்ளுவதும், சரியான நடவடிக்கையென்று ஜனங்கள் நினைத்தார்கள். பல்கேரிய ஜனங்கள் இதற்குமுன் நாஜி வந்தன முறையைக்கையாண்டு வந்தார்கள். நாஜி அடையாளங்களையும் அணிந்து கொண்டிருந்தார்கள். கெட்டுப்போன குழந்தைகளைப்போல் அவர்கள் 100 சத விகிதம் பொதுவுடமைக்கக்ஷியில் சேர்ந்து விட்டார்கள். சந்தர்ப்பத்திற்கேற்ப பொது உடமைக் கொள்கைதான் அழகானதென்று அவர்கள் நினைத்தார்கள். இந்த ஆடம்பரத்தைக்கண்டு ருஷ்யர்கள் திருப்தி அடைந்து விடுவார்களென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் ருஷ்யர்கள் கபடமற்றவர்கள். அவர்களுக்கு நல்ல பகுத்தறிவு உண்டு. இந்தப் பாசாங்கை அவர்கள் கண்டு பிடித்து விடுவார்கள். ருஷ்யரை திருப்தி செய்வதென்றால் எவ்வளவு சங்கடமாக இருந்தாலும் அவனிடம் உண்மையை உரைத்துவிடவேண்டும். அப்பொழுது அவனுக்கு காருண்யம் உண்டாகும்.

விடுதலைக்காக ஆரம்பத்தில் ஒருவாரம் ஆரவாரம் செய்தபின் பல்கேரியர்கள் வெறி அடங்கி விட்டது. இப்பொழுது பல்கேரியர்கள் விவசாயிகளைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்கள். விவசாயிகளை ஆதரிக்கும் கக்ஷிதான் இனிமேல் பல்கேரியாவின் ராஜீய அபிவிருத்திகளில் தலைமை வகிக்கக்கூடும். ருஷ்யர்கள் இதில் குறிக்கிடுகிறார்களா? இல்லை. ஸோபியாவுக்குள் ருஷ்யர்கள் புகுந்த தினத்தன்று இவையெல்லாம் அகஸ்மாத்தாக நடைபெற்றன.

ருஷ்யர்கள் பால்கன் நாடுகளில் கலகத்தை உண்டு பண்ணுகிறார்களா? இல்லை. ருஷ்யப் படைகள் பல்கேரியாவுக்கு வருமுன்னரே பல்கேரிய கொரில்லாப்படைகள் கிரேக்க பொது உடமை இயக்கமான கிரேக்க E. A. M. சங்கத்துக்கு இரண்டு தூதர்களை அனுப்பி கிரீஸுக்கு சொந்தமான எந்த எந்த பிரதேசங்களை பல்கேரியா காலி செய்யவேண்டுமென்று முடிவுக்கு வருமாறு வேண்டிக்கொண்டது. அவர்களுக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டபடி, பல்கேரிய நிர்வாகம் மறைந்து விடுமென்றும் E. A. M. அதை ஏற்றுக்கொள்ளுமென்றும், அவர்கள் எதிர் பார்த்தார்கள். E. A. M. சங்கத்தின் பிரதிநிதியாக பாபாண்டரு நிர்வாகத்திலிருக்கிறார். ஆகிலும் E. A. M. மட்டும் கிரீஸின் பிரதிநிதித்துவ சபையாக இருக்க முடியாது.

ஆகையால் கிரேக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகள் உண்மையான ஒப்பந்தத்தை ஏற்படுத்த ஸோபியாவுக்கு வந்த பொழுது, பல்கேரிய நிர்வாகம் மறுபடியும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதன் மூலம் பழைய ஒப்பந்தம் ரத்தாகி விட்டது. இதிலும் ருஷ்யர்கள் குறுக்கிடவில்லை. இஸ்தான்பூல் பத்திரிகைக்கு எழுதிய டானியின் விசேஷ நிருபர் பின் வருமாறு சொல்லுகிறார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் கிரேக்க நிர்வாகம் அதிகாரம் வகிக்கும் வரையில் பல்கேரியா ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களில் ஆக்ஷிபுரிய வேண்டுமென்று இருவர்களுக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

துருக்கியில் அதிர்ச்சிகள்.

இவையெல்லாம் துருக்கி யோசனை செய்வதற்குப் போதுமானவை. சில காலமாக ஜனங்கள் துக்கத்தில் ஆழ்ந்தவர்களாய் தெருக்களில் நடமாடினார்கள். இந்தக் கலகங்களில் துருக்கி நிர்வாக அங்கத்தினர்களும் கலந்துகொண்டார்கள். அவர்களில் அநேகர் ஜெர்மன்

ஒலிபெருக்கைக்கேட்டு மயங்கி விட்டார்கள் போலும். ஜெர்மனி அபாரமாகப் புழுகிவருகிற தென்று ருஜுவானபோதிலும், இன்னும் அதன் பிரசாரங்களை அநேகர் நம்புகிறார்களென்பது ஆச்சரியமாக இருக்கிறது. துருக்கிக்கு என்ன நேரிடுமென்று அவர்கள் அறிந்துகொள்ள பிரியப்படுகிறார்கள். அப்படி ஒன்றும் சம்பவிக்க இடமில்லை. ஏனெனில் துருக்கி இது வரையில் ஒரு நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளவில்லை. அதைத்தான் எல்லோரும் கண்டனம் செய்து வருகிறார்கள்.

துருக்கி சம்பந்தமாக ருஷ்யாவின் மனப்பான்மை என்ன? இதைக்கூறுவது கஷ்ட சாத்தியமானது. பூர்ணமான அலக்ஷிய புத்திதான் தோன்றுமென்று நான் நினைக்கவேண்டி யிருக்கிறது. ஏற்கனவே ருஷ்யப் படைகள் துருக்கியின் எல்லைச்சரகத்தை அடைந்து விட்டன. வலுவானபடை பலமில்லை. சொற்பப் படைகள் எல்லைச்சரகத்திலுள்ள கேந்திர ஸ்தானங்களைக் காப்பாற்றி வருகின்றன. பல்கேரியாவிலுள்ள ருஷ்யப்படைகளுக்கும், துருக்கியின் எல்லைச் சரகத்துக்கும் நடுவில் பொது ஸ்தலமிருக்கிறதென்று சொல்லக்கூடும். பல்கேரியாவில படைகள் கிழக்கு முகமாகவும், தெற்குமுகமாகவும் செல்லவில்லை. மேற்கு முகமாக யூகோஸ்லாவியாவையும், டிட்டோவின் படைகளையும் நோக்கிச் சென்றன. பல்கேரியாவிலும், ருமேனியாவிலும், ருஷ்யா பிரவேசித்ததற்கு ஒரு காரணம்தான் உண்டு. அதாவது நாஸிகளைத் துரத்தியடிப்பது. இந்த ஊக்கத்தை எந்த நடவடிக்கையும் குலைத்து விடமுடியாது.

விமானபலமும், கவசம் பூண்ட மோட்டார் படகுகளுமுள்ள நவீன நாகரீகத்தில் ஜலசந்தியின் முக்கியத்துவம் போய்விட்டது. ஒரு நூற்றாண்டிற்கு முன்னிருந்த விரோதமான அக்கரைகள் அநேகமாக மறைந்துவிட்டன. ஆகையால் ஜலசந்தி சம்பந்தமான பிரச்னைகளில் ருஷ்யாவுடன் துருக்கி ஒத்து நடப்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையும் இருக்காது. துருக்கி ஜலசந்தியின் ரக்ஷகர். ஜலசந்தியின் கார்டியன் என்றால் மற்றொருவருக்காக என்று பொருள்படும். முன்காலத்தில் அநேகர்களுக்கு ஜலசந்தி முக்கியத்துவமுள்ளதாக இருந்தது. மாண்ட்ரியூ ஒப்பந்தத்தில் சேர்ந்தவர்களுடன் துருக்கி அதிகாரம் வகிக்கும் வல்லரசு என்று சில சமயங்களில் சொல்லிக்கொண்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் மறைந்துவிடும். அதற்கு பதிலாக தெளிவாகவும் ஒரு சிலரின் அக்கரைகளை ரக்ஷிக்கக்கூடியதுமான ஒரு புதிய சாஸனம் ஏற்படக்கூடும். ஆகையால் துருக்கியில் பரஸ்பர விரோதமுள்ள அக்கரைகள் குறுக்கிடு மென்ற பீதி துருக்கிக்கு நீங்கிவிடும்.

நார்வேயிலிருந்து ஜெர்மனி பின்வாங்குவது.

ருஷ்யர்கள் நாஸிகளைத் துரத்தி வருகிறார்கள்.

(டெய்லி ஹெரால்டு).

பெட்ஸாமோவின் பொட்டலான சமவெளிகளிலுள்ள போர்முனையை மூன்று வருஷங்களாக பலப்படுத்திவந்த நான்கு ஜெர்மன் டிவிஷன்களின் எஞ்சிய படைகள் நார்வேயில் வடக்கு பாகத்திலிருந்து தப்பி ஓட முயலுகிறார்களென்றும், அவர்களை ருஷ்யர்கள் துரத்தியடிக்கிறார்களென்றும், டெயிலி ஹெரால்டின் ஸ்டாக்ஹோமிலுள்ள நிருபரான வாலஸ் கிங் எழுதிகிறார்.

வாரங்கார் தீபகற்பத்தைச் சுற்றி வடக்கு முனையிலுள்ள மலைகளினாலும், நேசதேச கடற்படையின் பீரங்கி வீச்சினாலும், ருஷ்ய விமானங்களின் வெடிகுண்டு வீச்சினாலும், ஏற்படும் அபாயத்துக் குட்பட்டு ஜெர்மன் ஸோல்ஜர்கள் ஏறிச்செல்லும் அநேக கப்பல்கள் வந்துகொண்டிருக்கின்றன. கிர்கெனிஸுக்குத் தென் கிழக்கில் 100 மைல்களுக்கு அப்பாலில் ரெண்டுலிக்கின் சேனையின் பாகங்கள் பனி மூடிக்கிடக்கும் காடுகள் வழியாக 120 மைல்கள் கடந்து செல்ல முயலுகின்றன. இந்த பின்வாங்குவதற்கு ஒத்தாசை செய்ய ஜெர்மனியின் பின் அணிப் படைகள் சிறிது போர் செய்து வருகின்றன.

நார்வேக்குக்கு வடக்கிலுள்ள எல்லா ஜெர்மன் படைகளையும் வாபஸ் பெற்று விடுவதாக பெர்லின் ஒப்புக் கொள்ளுகிறது. டிராவைட்ஹிமுக்கு சற்று வடக்கிலுள்ள ஒரு கோட்டுக்கு நார்வேயிலுள்ள படைகளை ஜெர்மனி வாபஸ் பெறுமென்று ஸ்டாக்ஹோமிலுள்ள வட்டாரங்களில் சொல்லுகிறார்கள்.

ஹிட்லரைத் திருப்தி செய்ய முடியவில்லை.

கடற்தளபதி மாகெரியுடன் முஸோலினியின் சந்திப்பு.

முஸோலினிக்கும் படாக்லியோ நிர்வாகத்தின் கடற்படை அறிக்கை ஆபீஸரான கடற்தளபதி பிராங்கோ மாகெரிக்கும் நடைபெற்ற சம்பாஷணை ரோமாபுரியின் நிருபரான வால்டர் லூகாஸுக்குச் சொல்லப்பட்டது. அதை டெயிலி எக்ஸ்பிரஸ் பிரசுரித்திருக்கிறது.

இந்தச் சந்திப்பு 1943-ம் வருடம் ஜூலை மீ 27உ அன்று நடைபெற்றது. அவ்வமயம் இதாலிய மன்னர் முஸோலினியை பர்த்தரப் செய்தபின் அவரை போன்ஸாவுக்கு அழைத்துச் செல்லும் வேலையில் கடற்தளபதி மாகெரி ஏவப்பட்டார்.

இந்தச் சந்திப்பிலிருந்து ஹிட்லர் ருஷ்ய நடவடிக்கையைப்பற்றி பிடிவாதமாக இருக்கிறானென்றும், ருஷ்யாவைப் பற்றிய அவனுடைய எண்ணங்களும் புதிய உலக அமைப்பைப் பற்றிய எண்ணங்களும் தவறானவை என்று அவனைத் திருப்தி செய்யமுடியவில்லை என்றும் அவர் அறிந்தார்.

முஸோலினி பின்வருமாறு சொன்னான்: "ருஷ்யாவை சில மாதங்களுக்குள் வென்று விடுவோம் என்று ஜெர்மனி நினைத்தது. அவர்கள் ஒரு வகையில் ஏமாற்றமடைந்துவிட்டார்கள். ஹிட்லரே இதைப்பற்றி என்னிடம் சொன்னான். படைகளைத் திரட்டுவதற்கு ருஷ்யர்கள் ஜெர்மன் ரகசியப் போலீஸுக்கு ஒரு திட்டத்தை அனுப்பினார்கள். அந்தத் திட்டத்தில் நுட்பமான அம்சங்கள் அடங்கி இருந்தன. இதை ருஷ்யா தயாரித்திருக்க முடியாதென்று ஜெர்மனி நினைத்தது. ஆகிலும் அதைப் பெற்றுக்கொண்டது. ருஷ்யர்கள் தாங்கள் அனுப்பின ஏஜெண்டுகளை அரஸ்ட்செய்து சுட்டுக் கொன்றுவிட்டார்கள். ஜெர்மனிக்கு இது எட்டிய பொழுது திட்டம் உண்மையானதென்று ஹிட்லர் நம்பினான். இதெல்லாம் சிருஷ்டனையானது, ஐம்பது குதிரைப் படைகள் என்று சொன்ன இடத்தில் 50 கவசம் பூண்ட படைகள் என்று இருக்கவேண்டும்.

ருஷ்ய வலைக்குள் ஹிட்லர் சிக்கிக்கொண்டான். ஸ்டாலினுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளும்படி ஹிட்லரிடம் நான் மன்றாடினேன். சமீபகாலத்தில் எப்பாடுபட்டும் யூக்ரேனில் கைப்பற்றிய எல்லாவற்றையும் கைவிடும்படி நேர்ந்தாலும், சமாதானத்தைக் கோரும்படி நான் வேண்டிக்கொண்டேன்.

அவனுடைய மூட பக்திக்குப் படும்படியாக எடுத்துரைத்தேன். முதல் நடவடிக்கை இகழ்ச்சி பெற்றதென்றும், அதன்பின் கடுமையான மாரிகாலம் வந்ததென்றும், இறுதியில் ஸ்டாலின்கிராட் அழிவு ஏற்பட்டதென்றும் நான் ஞாபகப்படுத்தினேன். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. 1942-ம் வருஷம் முதல் முன்னேறித்தாக்கும் சக்தியை ஹிட்லர் இழந்துவிட்டான் என்றும் அந்த சக்தியை இழந்தவர் யுத்தத்தில் தோற்று விடுவானென்றும் நான் சொன்னேன்.

அபிஸீனிய யுத்தத்திற்குப் பிறகு மத்தியதரைக் கடலில் பிரிட்டனுடன் போர் புரியாமல் அயல் நாட்டார்போல் வாழ்வது சிலாயக்கியமான நடவடிக்கை என்று நீங்கள் நினைக்கிறீர்களா என்று மாகொரி முஸோலினியைக் கேட்டார். "நான் அதற்கு முயற்சி செய்தேன், பயன்படவில்லை" என்று முஸோலினி பதிலளித்தார்.

நாம் இன்னும் சில வருஷங்கள் காத்துக்கொண்டிருந்திருக்கலாமல்லவா என்று மாகெரி வினவினார்.

முஸோலினி பின்வருமாறு பதிலளித்தார். "அவ்விதம் செய்திருக்கலாம். எஃகு ஒப்பந்தத்தில் நான் கையெழுத்திட்டபின் ஹிட்லரைத் தடுக்க முயன்றேன். 1942-ம் வருடத்திற்குமுன் என்னால் தயாராக இருக்க முடியாது என்று அவருக்கு எழுதினேன். அபிஸீனியாவை ஆசுவாசப் படுத்தவேண்டியிருந்தது. பீரங்கிகளை புதுப்பிக்கவேண்டியிருந்தது. டாங்கிகளைக் கட்டவேண்டியிருந்தது. யுத்தக் கப்பல்களைக் கட்டி முடிக்கவேண்டியிருந்தது. இதாலோ ஜெர்மன் நட்பு மிகவும் சிறிய செடி என்றும் அவர்களுக்கிடையே உள்ள சம்பந்தங்களில் மனப்பான்மையிலும், உணர்ச்சியிலும், மாறுதல் ஏற்படுவதற்குக் காலதாமதம் ஆகுமென்றும் நான் அக் கடிதத்தில் எழுதியிருந்தேன்.

ஹிட்லர் யுத்தத்தைத் துவக்கியபொழுது நான் 10 மாத காலம் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தேன். அதன்பின் நான் குறுக்கிடவேண்டியிருந்தது. அவ்விதம் செய்யாதிருந்தால் பிரான்ஸில் இதாலிக்குள்ள பாத்தியங்களை நான் இழக்கவேண்டி வந்திருக்கும். ஜெர்மானியர்கள் இங்கிலாந்தைப் படையெடுத்திருப்பார்கள். அங்கு எல்லாம்

சேர்ந்து 200 பீரங்கிகள் தான் இருந்தன என்று நான் கேள்விப்பட்டேன். ஜெர்மன் படைகள் பிரிடனில் இறங்கி இருந்தால் பிரிடன் சரணடைந்திருக்கும். அதன் நிர்வாகம் கனடாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் சென்றிருக்கும். எந்நிலைமையிலும் நம்முடைய வலிமை அதிகரித்து இருக்கும்.

இந்தச் சமயத்தில் ஜிப்ரால்டரைக் கைப்பற்றும்படி நான் ஹிட்லரைத் தூண்டினேன். பிராங்கோவின் மனப்பான்மை நிச்சயமாய்த் தெரியவில்லை, என்று ஹிட்லர் சொன்னான். பிரான்ஸின் அனுமதி பெற்றோ, அனுமதி பெறாமலோ அதன் குறுக்கே செல்லப்போகிறோம் என்று பிரான்ஸிடம் சொன்னால் போதுமென்று நினைத்தேன். லாவினியாவுடன் தொடர்பு ஏற்படுத்தி இருந்தால் போதுமானதாக இருந்திருக்கும். அப்பொழுது பிரிடிஷ் கடற்படை அதைவிட்டு ஓடியிருக்கும். ஜெர்மானியர்கள் பிரெஞ்சுக்காரர்களை சந்தித்த பொழுது பட்டிக் காட்டு ஜனங்கள் பிரபுக்களைக் கண்டதுபோல் நடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் புத்தியை இழந்துவிட்டார்கள்.

அதன்பின் முஸோலினி மாகெரியை உற்றுநோக்கி மேஜையைத் தட்டிக்கொண்டு பின் வருமாறு சொன்னான்.

நாம் ஜெர்மானியர்களை விட்டு நழுவ வேண்டும். மூன்று வருஷங்களாக யுத்தம் செய்தோமென்றும் நம்முடைய வியாபாரக் கப்பல்களும் அழிந்து போய்விட்டன என்றும், நம்முடைய நகரங்கள் நாசமாய்விட்டன என்றும் அவர்களிடம் நாம் சொல்ல கடமைப்பட்டி ருக்கிறோம். ஜெர்மனி நமக்கு உதவி அளிக்காது. நாம் வேறொன்றும் செய்வதற்கில்லை.

ஹங்கேரியர்களும், ருமேனியர்களும் நம்மைப் பின்பற்றுவார்கள். அவர்களாலும் இனி மேல் சகிக்கமுடியாது. ஜெர்மனியும் சகிக்கமுடியுமோ என்பது சந்தேகமாயிருக்கிறது. ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமை மோசமாக இருக்கிறது. சென்ற யுத்தத்தைப்போல் இப் பொழுதும் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று ஜெர்மானியர்களுக்கு தினசரி புலப்பட்டு வருகிறது. ஏராளமான தேசங்களைப்பிடித்தபின்னும், அயல் நாடுகளில் மைல்கள் கணக்கான துருப்புகளை வைத்திருந்தும், எதிரியின் கப்பல்களை மிலியன் டன்கள் கணக்காக மூழ்கடித்த பின்னும் வெற்றி கிட்டவில்லை. ருஷ்யாவில் மறுமுறை நெபோலியனுக்கு ஏற்பட்ட கதி ஏற்படும் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள்.

ஜெர்மனி எஃகினால் செய்யப்பட்ட கம்பிபோன்றது. நாம் மெழுகினால் செய்யப்பட்ட கம்பி போன்றவர்கள். சமயத்திற்குத் தக்கவாறு நாம் வளைந்து கொடுப்போம். ஆனால் உருக்குக் கம்பி திடீரென்று ஒடிந்துவிடும்.

மாஸ்கோ சம்பாஷணைகளைப்பற்றி இஸ்வெஸ்டியா பத்திரிகை.

ஒரேவிதமான லக்ஷியங்கள்.

ருஷ்யத் தலைவர்களும், பிரிடிஷ் தலைவர்களும் கூடிப்பேசியதென்பது மகத்தான ராணுவ, ராஜீய முக்கியத்துவமுள்ளதாகும்.

ஹிட்லரின் தந்திரம் அவனுடைய எதிரிகளுக்குள் சந்தேகத்தையும், அவநம்பிக்கையையும் உண்டுபண்ணி சமாதானத்தைக் கோரும் நாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக முறியடிப்பதுதான். இந்த திட்டம் உபயோகமற்றதென்பது வெகு காலத்துக்கு முன்பே ஸ்பஷ்டமாகிவிட்டது. நடப்பு சம்பவங்களை வரையக்கூடிய எந்த சரித்திரலிபியும் ஜெர்மனி இந்த யுத்தத்தில் அநேக ராணுவ, ராஜீயத் தவறுதல்களைக் கோர்வையாகச் செய்துவிட்டதென்றுதான் எழுத வேண்டும். அவ்விதத் தவறுதல்களில் ஒன்று, அவனுடைய முக்கியமான எதிரிகளிடையே பிளவை உண்டுபண்ணிவிடலாமென்று அவர் நம்பியிருந்தார். இந்த நம்பிக்கையையும் அவன் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவருகிறான்.

நேசதேசத்தாரின் அதிருஷ்டவசமாக, ஹிட்லர் எதிர்பார்த்து முயன்றதற்கு மாறாகவே எல்லாம் சம்பவித்துவிட்டன. ஒவ்வொரு நாளும் அநேக வருடமாக மூன்று வல்லரசுகளுக்குள் நட்பு வலுவடைந்துவிட்டது. மாஸ்கோ சம்பாஷணைகள் மூலம் இருதரப்பாருக்கும் நல்ல உணர்ச்சி விருத்தியடைவதற்கும், விவகாரமுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் அதிக சாதகம் ஏற்பட்டது. இந்த முறையில் மாஸ்கோ சம்பாஷணைகள் முக்கியத்துவமுள்ளவை என்று சொல்லுவது மிகையாகாது. அதற்கு அநேக தெளிவான ருஜுக்களிருக்கின்றன.

போலிஷ் பிரச்னையைப்பற்றி ருஷ்யாவுக்கும் பிரிடனுக்கும் பூர்ணமான ஒன்றுபட்ட அபிப்பிராயம் இல்லையென்று எல்லோருக்கும் தெரியவரும். இந்த வேற்றுமையைப் பயன்

படுத்த கோயபல்ஸ் அதிக முயற்சி செய்துவந்தான். அடிக்கடி விஷம பிரசாரம் செய்வதன் மூலம் அவன் ஜனங்களின் மனதைக் கெடுத்துவந்தான். ஆகிலும் மாஸ்கோ மஹாநாட்டிற்குப் பின் ருஷ்ய பிரதிநிதிகளும், பிரிடிஷ் பிரதிநிதிகளும் போலந்து சம்பந்தமான கடினமான பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்படுத்திவிடக்கூடுமென்று புலப்பட்டுவிட்டது. இந்த பிரச்னைகள் இறுதியாகத் தீர்க்கப்படவில்லையாகிலும், இந்தத் துறையில் பெரும்வெற்றி ஏற்பட்டிருக்கிறது. சமீப எதிர்காலத்தில் போலிஷ் பிரச்னை திருப்திகரமாகத் தீர்ந்துவிடுமென்று நம்பிக்கை கொள்ள முகாந்திரமிருக்கிறது.

முன்காலத்தில் தெற்கு ஐரோப்பாவில் சதாகாலமும் பல ஒன்றுக்கொன்று முரணான நோக்கங்களும், அக்கரைகளும் குடிகொண்டிருந்தன. இந்தப் பிராந்தியத்தை ஐரோப்பிய வெடிமருந்து நிலயம் என்று சொல்லுவதுண்டு. பழைய ஐதீகங்களை சிந்தனை செய்துகொண்டு ருஷ்யாவுக்கும், பிரிடனுக்கும் சண்டை மூட்டிவிட தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளை உபயோகித்துவிடலாமென்று ஹிட்லர் எண்ணினான். இந்த அம்சத்தில் ஹிட்லர் ஏமாற்றமடைந்துவிட்டானென்பது மாஸ்கோ மஹாநாட்டின் மூலம் வெளியாகிவிட்டது. சம்பாஷணையின்பொழுது இரு தேசத்துத் தலைவர்களும், ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்லாவியா, ஹங்கேரி, கிரீஸ் முதலிய நாடுகளின் பிரச்னைகளை ஸாங்கோபாங்கமாக விவாதித்தார்கள். பொதுவான எதிரியை கூடிய சீக்கிரத்தில் முறியடிப்பதற்கு ஒத்ததாக ஒன்றுபட்ட முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவின் மூலம் தென்கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சிறிய தேசங்களுக்கு அபாயமில்லாததுடன் ஜனநாயக முறையில் அபிவிருத்தி ஏற்படுவதற்கும் அவைகளுக்குத் திறப்பு உண்டாகியிருக்கிறது.

மாஸ்கோ மஹாநாட்டில் யுத்தத்துக்குப் பிந்திய உலக அமைப்பைப்பற்றிய பிரச்னைகளும், சர்ச்சை செய்யப்பட்டன. இந்த அம்சத்திலும் இரு தேசங்களின், அபிப்பிராயங்களும், எண்ணங்களும் ஒரேவிதமானவையென்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். ஏனெனில் இப்பொழுது நேசதேசப்படைகள் கிழக்கிலும், மேற்கிலும் ஜெர்மனியின் எல்லைச்சரகத்தைத் தாக்கிவரும்பொழுது இந்த விஷயம் முக்கியத்துவமுள்ளது. மாஸ்கோ மஹாநாட்டின் விளைவுகளின் சாராம்சம் பின்வருமாறு:—யுத்த காலத்தில் ருஷ்யா, அமெரிக்கா, பிரிடன் ஆகிய மூன்று வல்லரசுகளும் ஒன்றுபட்டு நடவடிக்கையை மேற்கொள்ளும். யுத்தத்துக்குப் பின்னும் அவைகள் அவ்விதமாக ஒற்றுமையுடன் நடந்துகொள்ளும். சமாதானத்தை விரும்பும் எல்லா நாடுகளுக்கும் இது மிகவும் முக்கியத்துவமுள்ளது. முக்கியத்துவமுள்ள நேசதேச வல்லரசுகள் ஜெர்மனியை முறியடிப்பதை துரிதப்படுத்த தங்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமையை பலப்படுத்திவிட்டார்களென்றும், அதேபோல் யுத்தத்துக்குப் பின்னும் உலக சமாதான பிரச்னைகளையும், தேசங்களின் பத்திரத்தையும் வெற்றிகரமாகத் தீர்த்துவிடுவார்களென்றும் எல்லோருக்கும் நம்பிக்கையை ஊட்டுகிறது.

எதிர்கால சமாதானத்திற்கு எல்லைக்கல்.

ருஷ்ய-பிரிடிஷ் நல்லுணர்ச்சி.

(பிராவ்டா.)

மாஸ்கோ மஹாநாட்டின் வெற்றிகரமான முடிவுகள் ஹிட்லரைச் சேர்ந்த கோஷ்டியின் எண்ணங்களுக்கு மறுமுறை உலைவைத்துவிட்டன. மூன்று வல்லரசுகளின் ஒன்றுபட்ட நடவடிக்கையினால் பூர்ணமான தோல்வியிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று இனிமேல் ஹிட்லர் கோஷ்டியார் நம்பியிருக்கமுடியாது. தோல்விக்குப்பின் அவர்களுக்கு ஏற்படும் நியாடமான கடுமையான சிக்ஷையிலிருந்தும் அவர்கள் தப்பமுடியாது.

மூன்று வல்லரசுகளின் ஒன்றுபட்ட நடவ்டிக்கை மூலம் ருமேனியாவுடனும், பின்லாந்துடனும் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டது. அநேக பிரச்னைகளை சர்ச்சை செய்த மாஸ்கோ சம்பாஷணைகள் ஜெர்மனியை முறியடிப்பதற்கும், யுத்தத்துக்குப் பின் சாசுவதமான சமாதானத்தை நிறுவுவதற்கும், கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் நேசதேச வல்லரசுகளினிடையே ஒற்றுமை வலுவடைந்துவிட்டதென்பதை வெளிப்படுத்திவிட்டன. ஜெர்மனியின் கொள்ளை முறையையும், காட்டுமிராண்டித்தனத்தையும், எதிர்த்துப்போராடும் ஜனநாயக நாடுகளின் விடுதலைக்காக நடைபெறும் மகத்தான போரின் தற்போதிய இறுதி கட்டம் எதிரியை முறியடித்தபின், தேசங்களில் நிரந்தரமான பலமான சமாதானத்துக்கு அஸ்திவாரம் போடும் வேலையையும் துவக்க சந்தர்ப்பமளிக்குமென்பதையும் குறிப்பிடுகிறது

எதிர்காலத்தில் சமாதானத்திற்கும், உலக பத்திரத்திற்கும் அஸ்திவாரம் போடும் பொருப்பு ஹிட்லர் கோஷ்டியை எதிர்த்துப் போராடும் வல்லரசுகளைச் சேர்ந்தது. அமெரிக்காவுடன் நெருங்கி ஒத்துழைப்பதினால் வலுவடைந்திருக்கும் பிரிடிஷ், ருஷ்ய ஒப்பந்தத்தை ஹிட்லர் ஜெர்மனியுடன் எதிர்த்து ஒன்றுபட்டு போராடுவதற்கும், ஐரோப்பாவில் எதிர் காலத்தில் நிரந்தரமான சமாதானத்தை நிறுவுவதற்கும், மூலைக்கல்லென்று சொல்லுவது உண்மையான பேச்சுத்தான். பிரிடிஷ்-ருஷ்ய ஒப்பந்தத்தை நடைமுறையில் பூர்த்தி செய்வதில்தான் மாஸ்கோ மீட்டிங்கின் முக்கியத்துவமிருக்கிறது. நேசதேசத்தார்களுக்குள் பரஸ்பர நல்லுணர்ச்சி வளர்ந்துவருவதென்பதையும், தோன்றக்கூடிய பிரச்னைகளை அவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை ஒன்றுபடுத்தி தீர்க்க வல்லமையுள்ளவர்களென்பதையும் மாஸ்கோ மஹாநாடு வெளிப்படுத்திவிட்டது.

கிரீஸின் செல்வ நிலமை ஜெர்மானியரால் அழிக்கப்பட்டது.

தொழிலாளர்களிடையே துயரம்.

(டைம்ஸ் பத்திரிகை).

மிஸ்டர் ஈடன் மாஸ்கோவிலிருந்து திரும்பி கெய்ரோவுக்கு வந்தபொழுது, ஆதென்ஸில் கிரேக்க நிர்வாகம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. தாய்நாட்டுக்குத் திரும்பிவந்துள்ள கிரேக்க நிர்வாகத்தை பிரிடிஷ் அயல்நாட்டுமெந்திரி பாராட்டியதும் சரியான நடவடிக்கைதான்.

அவரும், அவருடைய நிர்வாக அங்கத்தினர்களும், அவரின் விஜயத்தைப் பயன்படுத்தி, அரைகுறையாக விடுதலைபெற்ற கிரீஸின் முக்கியமான பிரச்னைகளை விவாதித்தார்கள். அந்த பிரச்னைகள் முன்பு தோன்றியதைவிட இப்பொழுது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

கிரீஸின் கோச, பொருளாதார நிலமை மிகவும் மோசமாக இருக்கிறது. லக்ஷக் கணக்கானவர்கள் வறுமைக்குட்படும் நிலமையிலிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடையாது. ஏனென்றால் வெளி நாட்டாரின் உதவியன்னியில் கைத்தொழில்களையோ, வியாபாரத்தையோ, விவசாயத்தையோ கிரீஸில் துவக்கம் செய்யமுடியாது.

கிரீஸில் கடுமையான மாரிகாலம் சமீபித்துவிட்டது. விறகு கிடையாது, ஆடை கிடையாது, உணவுப்பொருள் குறைவாகயிருக்கிறது. ஆதென்ஸில் மத்திய பக்கத்தில் நிலமை அவ்வளவு மோசமாக இல்லை. அங்குள்ளவர்களுக்கு நல்ல ஆடையும், நல்ல போஷணையும் கிடைத்துவந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இன்றும் தெருக்களில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வேலையும் கிடையாது. ஆகிலும் அவர்கள் சிரமப் படுவதாகத் தெரியவில்லை.

சுற்றுப்புறங்களிலும், தொழிலாளர் உள்ள இடங்களிலும் நிலமை கோரமாகயிருக்கிறது. எங்குபார்த்தாலும் ஏழ்மைத்தனமும், போஷணைக்குறைவும் தாண்டவமாடுகிறது. ஜனங்கள் எவ்விதம் பிழைத்திருக்கிறார்களென்பதே ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்குத் தேவைப் பட்டவைகளை நாம் அவசரமாக அனுப்பாவிடில் ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டுபோவார்கள்.

நாட்டுப்புறங்களிலும், தீவுகளிலும் நிலமை மாறிமாறியிருக்கிறது. சிலருக்குப் போதுமான உணவும், சிலருக்கு ஒன்றுமில்லாமலும் இருந்துவருகிறது. கிரீஸில் போக்கு வரத்தே இல்லாததால் கஷ்ட நிவாரணம் செய்யக்கூடிய வகையில் தேவைகளை வினியோகம் செய்வது சாத்தியமாகயிருக்காது.

ஜெர்மனி கிரீஸின் ரத்தத்தை உறிஞ்சிவிட்டது. நாட்டின் உணவுப்பொருள்களைக் கொள்ளையடித்துவிட்டது. ஒன்றையும் அந்நாட்டிற்குக் கொண்டுவரவில்லை. அக்கிரமமாகவோ அல்லது அலக்ஷிய புத்தியாலோ கிரீஸின் உற்பத்திகள் அழிபட்டுவிட்டன. தேசத்தின் கோசமும் பூராவாக நாசமாகிவிட்டது.

அரசாங்கத்துக்கு ஒரு வருவாயும் இல்லை. ஆறுமாதங்கள்வரையில் வரிவிதித மூலமாக ஒரு வருமானமும் கிடைக்காது. கைத்தொழில்களை ஆரம்பிக்க இயற்கைப்பொருள்கள் முக்கியமாக வேண்டும். இதன்மூலம் வருமானம் கிடைப்பதுடன், தொழிலாளர்களுக்கும் நம்பிக்கைதோன்றும். சோம்பேரியாக அவர்கள் திரிந்தால் அவர்களின் மனஉறுதி கெட்டுப் போய்விடும்.

பிலிப்பைன்ஸ் யுத்தம்.

ஜப்பானியக் கடற்படை நசுக்கப்பட்டது.

(மாஞ்சஸ்டர் கார்டியன் பத்திரிகை).

பிலிப்பைன்ஸ் யுத்தம் என்று சொல்லப்படும் போரில் ஜப்பானியக் கடற்படை சின்ன பின்னமாகத் தாக்கப்பட்டது. பலமாக அடிபட்டுள்ளது. இதனுல் ஜப்பானியக் கடற்படை சப்மரின்களையும், சிறிய கப்பல்களையும் தவிர மற்றையவை கிழக்கு இந்தியத் தீவுகளிலும், சைனுவிலும் வைக்கப்பட்டுள்ளவை அங்கேயே சிறிது காலம் இருக்கும். தண்ணீரில் விடப்படமாட்டா. இக்காலத்தில் நேசதேசக் கப்பல்கள் அநேகமாய் கடலில் பயமின்றி பல இடங்களிலும் போகலாம்.. எதிரிகளின் போக்குவரத்தைக் குலைக்கலாம். அதனுலேயே ஜப்பானிய சேனையும், இதர மக்களும் நாசமாக்கப்படலாம்.

8 யுத்தக் கப்பல்களும், 9 விமானந்தாங்கிகளும், 25 முதல் 30 குருயிஸர்களும் 80 நாச காரிகளும், 100 நாசகாரிகளுக்கு மேலும் நாசமானபின் ஜப்பானியர்கள் தற்காப்புக்கு முயல்வ தென்பது கஷ்டமானதாகும். இந்த ரகங்களில் ஒவ்வொன்றிலும் அமெரிக்கக் கடற்படை மட்டும் ஒரு நாளைக்கு இரு முறை, மும்முறை ஜப்பானிய கப்பல்களைத் தாக்க முடியும். பிரிடிஷ் கிழக்கு கப்பற்படைத் தாக்குதலைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டியதேயில்லை.

இம்மாதிரியாக பிலிப்பைன்ஸில் இப் பெரிய கடற்படையை ஜப்பான் ஏன் இறக்கி இருக்கும்? பார்மோஸாவிலுள்ள சேனைத்தளங்களினின்றும் ஜப்பானிய விமானங்கள் அமெரிக்க 3-ம் கடற்படையின்மேல் ஏற்படுத்திய நஷ்டத்தை பெரிதாய் நினைத்ததால்தான் இருக்கும். எனவேதான் இத்தருணத்தில் பெரும் நஷ்டத்தை பிலிப்பைன்ஸில் ஜப்பான் அடைந்தது.

பிரிடிஷ் கடற்படை தூரக்கிழக்குக்குப் புறப்பட்டுவிட்டது.

ஜப்பானின் தோல்வி துரிதப்படுத்தப்படும்.

(*A. J.* மாக்வின்னி.)

பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் தூரக்கிழக்குக்குப் புறப்பட்டுவிட்டன. கடற்படை இலாகாவின் முதல் பிரபுவான மிஸ்ட்டர் A. V. அலெக்ஸாண்டர் இதை வெளி யிட்டதிலிருந்து ஜப்பானை முறியடிக்கும் நடவடிக்கையில் பிரிடனும் பங்கெடுத்துக் கொள்ளுகிறதென்று நிச்சயமாய் புலப்பட்டுவிட்டது.

மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் பின்வருமாறு சொல்லுகிருர்:— "ஜப்பானியக் கடற் படையைத் தனிமையில் எதிர்த்துப் போராடக்கூடிய ஒரு கடற்படையை பஸிபிக்கில் வைத்து விடுவதாக நாங்கள் உத்தேசித்திருக்கிறேம்"

பிரிடனின் கடற்படைக்கு க்யூபெக் மஹா நாட்டில் ஒரு ஸ்தானம் அளிக்கப்பட்டதென் பதற்கு உத்தியோக வட்டாரங்களிலிருந்து இப்பொழுதுதான் முதல் முதலாகத் தகவல் கிடைத்துள்ளது. மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் இந்து மகாசமுத்திரம், தெற்குச் சீனக் கடல் என்பதுடன் பஸிபிக்கையும் பற்றிக் கூறினுரென்பது குறிப்பிடத்தக்கது. கடற்படை இலாகா மிகையாகச் சொல்லிவிட்டதென்று சொல்லுவதற்கில்லை. இவ்விதமாக எதிர்கால நட வடிக்கையைப் பற்றி அது பிரஸ்தாபித்ததே கிடையாது. ஆகையால் இந்த வழக்க மாறு தலின் மூலம் நேசதேசத்தாரின் தூரக்கிழக்கு அக்கரைக்கு முக்கியத்துவமுள்ள சம்பவங் களைப்பற்றி அதம பக்ஷமான தோற்றம்தான் ஏற்படுமென்று நினைக்கவேண்டும்.

விபரீதத்தைத் தடுக்கும் நடவடிக்கை.

சில வாரங்களுக்குமுன் கப்பல்களும், சாமான்களும் தூரக்கிழக்குக்கு ஏராளமாகச் சென்றன என்று மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் வெளியிட்டார். இந்த நடவடிக்கைகளின் நோக்கம் யாதென்று அவர் இப்பொழுது வெளியிட்டுவிட்டார். ஜப்பானியக் கடற்படையின் வலி மையைக் கவனிக்கும்போழுது பஸிபிக்கில் பிரிடன் குவிக்கக்கூடிய படைவலிமையை நாம் மதித்துவிடலாம்.

ஜப்பானியக் கடற்படையின் வலிமை உலகத்திலேயே பரமரகசியமாக உள்ளது. ஆகையால் விபரீதத்தைத் தடுக்கப்போதுமான ஏற்பாடுகள் செய்ய திட்டங்கள் நிறுவப் பட்டிருக்கின்றன.

யுத்தத்துக்குமுன் ஜப்பானிடமிருந்த 10 யுத்தக் கப்பல்களில் அமெரிக்கா இரண்டு கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாகவும், இரண்டு கப்பல்களை பழுது படுத்திவிட்டதாகவும்

பாத்தியம் கொண்டாடுகிறது. பழுதுபட்டவைகளை ஜப்பான் சீர்படுத்தியிருக்கக்கூடும். ஆகையால் ஜப்பானிடம் இப்பொழுது 8 யுத்தக் கப்பல்களிருக்கின்றன. அவைகள் 1913 முதல் 1923-க்குள் கட்டப்பட்டபோதிலும், எல்லா கப்பல்களும் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டுவிட்டன. அதைத் தவிர எட்டு அல்லது ஒன்பது பத்து அங்குல பீரங்கிகளுள்ள 40,000 டன்கள் எடைமானமுள்ள அநேக கப்பல்களும் ஜப்பானிடமிருக்கின்றன. அந்த ரகத்தில் இரண்டு முதல் ஐந்து கப்பல்களிருக்கலாமென்று அமெரிக்க வட்டாரங்களிலிருந்து கேள்விப்படுகிறோம்.

வேகமும், பீரங்கி சக்தியும்.

கப்பல்களின் கவசங்களை உத்தேசித்து ஜப்பான் அதம பக்ஷமாக 40,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களைக் கட்டியிருக்கிறது. இந்த பூதங்களை எதிர்த்துப் போராட அமெரிக்கா ஒன்பது 16 அங்குல பீரங்கிகளுள்ள 45,000 டன்கள் எடைமானமுள்ள அயோவா வகுப்புகளைச் சேர்ந்த யுத்தக் கப்பல்களைக்கட்டிவருகிறது. இவைகள் சாதாரண யுத்தக் கப்பல்களைவிட வேகமும் சுடும் சக்தியிலும் உயர்வானவை. இவைகள் இரு சமுத்திரங்களிலும் கப்பற்படை தயாரிக்கப்பட்டபொழுது மிதக்கவிடப்பட்டன. அவைகளை 14 அங்குல பீரங்கிகளுள்ள ஐந்தாம் ஜார்ஜ் ரகத்தைச் சேர்ந்த பிரிடனின் கப்பல்களுடன் ஒப்பிடலாம்.

பிரிடனிலிருந்த நான்கு கப்பல்களுடன் இவைகளும் கடற்படையில் சேர்ந்துவிட்டன என்று உத்தியோக முறையில் சொல்லப்பட்டுவிட்டது. அவசியமேற்படும்பொழுது ஜப்பான் கொண்டுவரக்கூடிய எந்த பூதத்தையும் எதிர்த்துப்போராட வேகமும் சுடுசக்தியுமுள்ள கப்பல்களை பிரிடிஷ் கடற்படை தயாராகவைத்திருக்கும் என்று மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் உறுதிகூறியுள்ளார்.

பிரிடிஷ் கப்பற் தளங்களில் சிறிது காலமாக 40,000 டன்கள் எடைமானமுள்ள நான்கு யுத்தக் கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. அவைகளில் இரண்டு கப்பல்களுக்கு லையன் என்றும் டெமரார் என்றும் பெயரிடப்படும். இவைகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன வென்று மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் நினைத்துவிட்டார்போல் தோன்றுகிறது.

ஜப்பானியர்களும் 12 அங்குலமுள்ள பீரங்கிகளுள்ள 15,000 டன்கள் எடைமானமுள்ள சூபர் கனமான சஞ்சாரிகளைக் கட்ட திட்டம் போட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அவைகள் ஜெர்மன் சிறிய கொள்ளைக் கப்பலை ஒத்ததாக இருக்குமென்று அமெரிக்க கடற்படை வட்டாரங்கள் சொல்லிவருகின்றன. அவைகளினின்றும் ஏற்படும் அபாயத்தையும் பிரிடன் சமாளிக்கவேண்டும்.

ஜப்பானியக் கடற்படைக்கு ஒரு குறைவுண்டு. அதற்கு விமானம் தாங்கிக் கப்பல்கள் கிடையாது. ஜப்பானுக்குச் சுலபமாக வெற்றிகள் கிடைத்துவந்தபொழுது ஜப்பான் சாமான் கப்பல்களை துரிதமாக விமானந்தாங்கிகளாகத் தயார் செய்துவிட்டது. அவைகளில் அநேகத்தை இப்பொழுது ஜப்பான் இழந்துவிட்டது. நமது கடற்படையின் சவாலை ஏற்றுக்கொள்ளுவதற்கு ஜப்பான் புதிய கப்பல்களை அனுப்ப சக்தியற்றதாக இருக்கிறது.

பிரிடனின் உறுதியுள்ள போர்வீரர்கள்.

முடிவான கடற்போரை நடத்த ஜப்பானியக் கடற்படை தீவுகள் நிரம்பிய சமுத்திரத்தைத் தேடுகிறது. ஏனெனில் சமீபத்தில் தரையிலுள்ள விமான தளங்களிலிருந்து கப்பல்களுக்கு ரக்ஷணை கிடைக்கவேண்டும். ஆனால் அமெரிக்க நடவடிக்கைகள் மூலம் இந்த பாதுகாப்பும் உபயோகமற்றதென்று வெளியாகிவிட்டது. தீவுகள் மூழ்கடிக்கமுடியாத விமானந்தாங்கிகளென்றாலும், அவைகள் அசைவற்றவை. பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் திடீரென்று பாய்ந்து தாக்குவதற்கு அவைகள் சிறந்த லக்ஷியங்கள்.

எதிரியின் பலத்தை ஆராய்ச்சி செய்யும்பொழுது நவீன முறையில் உலகத்திலுள்ள கடற்படையைப் போல பிரிடிஷ் கடற்படையும் வலுமிகுந்ததாக இருக்குமென்று மிஸ்ட்டர் அலெக்ஸாண்டர் அபிப்பிராயப்படுகிறார் போலும்.

மேலும் அந்த கடற்படையில் ஐந்து வருடங்களாக இடைவிடாது போர்புரிந்த அநேகர்களிருக்கிறார்கள். அவர்கள் ஐரோப்பாவில் தங்களுடைய வேலையை முடித்துவிட்டார்கள்.

ஆகிலும் பிரிடிஷ் கடற்படை இரண்டாவது உலக யுத்தத்தில் அநேக நெருக்கடியான சமயத்தை சமாளித்திருந்தபோதிலும், பசிபிக்கில் அது இன்னும் மகத்தான காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது.

யுத்தத்துக்குப்பின் உலக சீர்திருத்தம்.

(13)—குடித்தனம்.

சொற்பொழிவாளர்கள்:—மிஸ்டர் விக்ஹாம் ஸ்டீட் (தலைவர்).
லேடி கிரிக்.
மிஸஸ் ஹண்டு.
டாக்டர் ரூத் யங்.

(1944-ம் ஹு அக்டோபர் மீ 16-ம் தேதியன்று பிரிடிஷ ஒலிபரப்பில் பேசியது).

ஸ்டீட்: இன்று குடும்ப யோக க்ஷேமத்தைப்பற்றிப் பேசுவோம். குடித்தனம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஆகிலும் பிரிடிஷார்களுக்கு இந்திய குடும்பத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. கிரிக் சீமாட்டியே, இந்தியாவில் தாங்கள் அநேக காலம் வசித்திருந்ததால் அதைப்பற்றித் தெளிவாகச் சொல்லுவீர்களா?

கிரிக்: அது சாத்தியமில்லை. நான் ஐந்து வருஷங்கள் சுகமாக வாழ்ந்து வந்திருக்கிறேன். இந்தியரின் இல்லறத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

ஸ்டீட்: சரி, இந்தியக் குடும்பத்தைப்பற்றி யில்லாவிட்டாலும், குடித்தனம் என்ற விஷயத்தை சர்ச்சை செய்வோம்.

கிரிக்: நான் குடும்பஸ்திரீயைப்பற்றிச் சொல்லுகிறேன். அவர்களின் அலுவல்களைப்பற்றி பிரிடிஷார்கள் அறியமாட்டார்கள். அன்று ஒலிபரப்பில் குடும்பஸ்திரீயின் 'இழிவான வேலை' என்பதைப்பற்றி பேசினர்.

ஸ்டீட்: நான் ஒரு வேலைக்காரனென்றும், சமையல் செய்பவனென்றும் அறிந்து கொள். யுத்தம் ஆரம்பமானபின் பிரிடிஷ் மக்களைப் போல் நானும் குடும்ப அலுவல்களை நடத்திவிருக்கிறேன்.

கிரிக்: இது கஷ்டமான வேலையென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ஸ்டீட்: சித்தத்துக்கு இளைப்பு ஏற்பட்டால் அதற்கு ஒரு மருந்து உண்டு. குனிந்துகொண்டு தரையை சுத்தி செய்தால் சித்தத்துக்கு ஆசுவாசம் ஏற்படும்.

கிரிக்: ஆக்ஸ்போர்ட் இங்கிலீஷ் அகராதியில் குடும்பஸ்திரீ என்பதை குடும்பத்தை சாமர்த்தியமாகவும், செட்டாகவும் நடத்துகிறவள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவள் குடித்தன பொருளாதார நிபுணர். கஷ்டப்படுகிறவள் என்பதற்கு அடிமை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்டீட்: இந்த வேலைக்கு குடும்ப நிர்வாக சாமர்த்தியம் அவசியமாகும்.

கிரிக்: ஆமாம்.

ஸ்டீட்: மிஸஸ்—ஹண்டு, வீட்டு வேலையைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?

ஹண்டு: அது கஷ்டமானதல்ல. குடும்பஸ்திரீ அதில் எல்லா நேரமும் ஈடுபட்டிருக்க வேண்டியதில்லை. இருந்தாலும் இது ஒரு பந்தனம். குடும்பஸ்திரீ வெளிக் காரியங்களில் பங்கெடுத்துக்கொள்ள முடிவதில்லை. அதனால் சமூகத்திற்கு அவளுடைய தொண்டு இல்லாமல் போய்விடுகிறது.

கிரிக்: நான் இதை ஒப்புக்கொள்ளமாட்டேன். ஆகிலும் ஸ்திரீயின் வேலை குடும்ப காரியங்களைச் சரிவர நடத்துவதுதான். இந்த வேலைக்கு அவள் இன்றியமையாதவள். மற்ற எந்த வேலைக்கும் வேலைக்காரர்கள் கிடைத்து விடுவார்கள், குடும்பஸ்திரீ இல்லாவிட்டால் குடும்பம் நாசமாகிவிடும். டாக்டர் யங்க், நீங்கள் இதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

யங்க்: ஒரு அம்சத்தில் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகிலும் பெரிய குடும்பமுள்ள ஒரு ஸ்திரீக்கு வெளி அலுவல்களைச் செய்ய அதிக அவகாசமிருக்காதென்று நினைக்கிறேன். இங்கிலாந்தில் சக்தியுள்ளவர்கள் வேலைக்காரர்களை அமர்த்தியிருந்தார்கள். இப்பொழுது வேலைக்காரர்களில்லாததால் அவர்கள் அவ்விதம் செய்ய முடியாது.

ஹண்டு: நான் வேலைக்காரர்களின் நியமனத்தை ஒப்புக்கொள்ள முடியாது.

ஸ்டீட்: ஹண்டு, உன்னுடைய ஆக்ஷேபனை என்ன?

ஹண்டு: ஒருவர் செய்யவேண்டிய வேலைக்கு கூலியாட்களை அமர்த்துவதற்கு என்ன நியாயமிருக்கிறது.

யங்க்: ஹண்டு, உன்னுடைய டாக்டர், நியாயவாதி இருக்கிறார். அதுபோல் என் வேலைக்காரர்களை அமர்த்தக்கூடாது. குடித்தன வேலையை அபிவிருத்திசெய்து அதை ஒரு தொழிலாக ஏற்படுத்தவேண்டுமென்று நினைக்கிறேன்.

ஹண்டு: ஒரு ஸ்திரி குடும்பவேலையைக் கவனிக்கலாம். அவளுக்கு வைத்தியம் வேறொருவர் தானே செய்யவேண்டும்.

யங்க்: சமயலகட்டு அலம்புவதைவிட மற்றொரு வேலையைச் செய்ய அவள் சக்தி யற்றிருந்தால் அவள் ஏன் வேலைக்காரர்களை அமர்த்திக்கொள்ளக்கூடாது.

ஹண்டு: சமையல் கட்டு வேலையையும் அவள் ஏன் சேர்த்துச் செய்யக்கூடாது? வயது முதிர்ந்த குழந்தைகளுள்ள ஸ்திரீகள் வீட்டு வேலையைக் கவனித்துவிட்டு பிறகு சமூகத்துக்கும் தொண்டு செய்யலாம்.

யங்க்: சமயலறை வேலையைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆகிலும் என்னுடைய அனுபவத்தை ஒட்டி நான் சொல்லுகிறேன். குடும்பம் ஆரம்பமான பொழுது நான் வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தேன். அதன் பின் நான் என்னுடைய தொழிலை ஆரம்பித்து விட்டேன்.

கிரிக்: அப்பொழுது உன்னிடம் ஒன்று அல்லது இரண்டு வேலைக்காரர்கள் இருந்திருக்க வேண்டுமே.

யங்க்: இந்தியாவில் பள்ளிக்கூடங்களுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் அநேகம் ஸ்திரீகள் தேவை. வேலைக்காரர்களில்லாவிட்டால் அதற்கு ஆட்கள் எங்கிருந்து கிடைக்கும்.

ஹண்டு: ஒரு சிறிது ஒத்தாசை வேண்டிய தென்பதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. பூராவாகவும் பிறரை நம்பி ஒருவர் இருக்கக் கூடாதென்று தான் நான ஆக்ஷேபிக்கிறேன்.

ஸ்டீட்: நம்முடைய விஷயத்திலிருந்து சர்ச்சை வேறுபக்கம் சென்று விட்டது. தேசத்தின் வாழ்க்கைக்குக் குடும்பம் முக்கியம் என்பது தான் நமது விஷயம். இந்நாட்டில் குடும்பஙகளும், கிராமங்களும் இல்லாமலிருக்க முடியாது. ஜனஙகள் அஙகு தான் திரும்பிச் செல்லுவார்கள். என்னுடைய குடும்பத்தில் ஐந்து பேர்கள் தான். என்னுடைய பெற்றோர்கள் மிகவும் புத்திசாலிகள். ஆகிலும் என்னுடைய தாயார் குடும்பத்தை மிகவும் சாமர்த்தியமாக நடத்தினாள். அத்துடன் அவளுடைய கலை ஞானத்தையும் போஷித்து வந்தாள்.

யங்க்: இந்தியாவில் ஸ்திரீகள் எல்லோரும் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள். வேறு வேலைகளுக்கு ஸ்திரீகள் எங்கிருந்து கிடைக்கும்.

ஹண்டு: நான் இதை ஒப்புக்கொள்ளமாட்டேன். மற்ற நாடுகளைப் போல இந்தியாவிலும் குடும்ப முறையில் நவீன சௌகரியங்கள் ஏற்பட்டால் குடும்ப ஸ்திரீக்கு சிறிது சாவகாசம் ஏற்படும். அவள் ஜனசமூகத்துக்கும் தொண்டு செய்யலாம். அநேகர்கள் இப்பொழுது சமூகத்தொண்டு செய்து வருகிறார்கள்.

கிரிக்: இது கடினமான பிரச்னை. மற்றொரு சிரமமு மிருக்கிறது. கமிட்டிகளில் சேர்ந்திருக்கும் ஸ்திரீகளைப் பற்றியது. இங்கிலாந்தைப் போல இந்தியாவிலும் அநேகர்கள் இருக்கிறார்கள். ஒரு இந்திய ஸ்திரீ 35 கமிட்டிகளில் மெம்பராக இருப்பதாகச் சொன்னாள். நான் பதிலுரைத்தேன் "35 கமிட்டிகளில் சேர்ந்திருக்கும் நீ எவ்விதம் உன்னுடைய அலுவல்களைச் சரிவரச் செய்ய முடியும்" குடும்ப வாழ்க்கையை திரம்பட நடத்துவதும் கமிட்டியில் உட்காருவது போல் அவசியமானது.

ஸ்டீட்: பிறரைச் சார்ந்திராத ஸ்திரீகள் தான் பொது ஜனசேவையில் ஈடுபடலாம். கமிட்டியில் வேலை செய்யலாம். ஹண்டு, நவீன பழக்கவழக்கங்கள் இந்தியாவின் குடும்ப வாழ்க்கையை எவ்விதம் பாதித்திருக்கின்றன?

ஹண்டு: டவுனை அவைகள் பெரும்பாலும் பாதித்திருக்கின்றன. கிராமங்களில் அவ்வளவு அதிகமாக இல்லை.

ஸ்டீட்: இந்தியர்களுக்கு குடும்பத்தைப்பற்றி என்ன அபிப்பிராயம் என்று எனக்கு விளங்கவில்லை.

ஹண்டு: இந்திய வாழ்க்கையில் இது அதிக வலுவான சக்தி. நவீன நாகரீக மூலம் குடும்பங்களின் சில நடவடிக்கைகள் மாறுதலடைந்துவந்தபோதிலும், எப்பொழுதும்போல குடும்பப்பற்றுதல் அதிகமாகவே இருந்துவருகிறது.

கிரீக்: இங்கிலாந்திருப்பதைவிட இந்தியாவில் இல்லறப்பற்றுதல் அதிகமென்று சொல்லுகிருயா.

ஹண்டு: இங்கிலாந்தில் நான் அநேககாலம் வசித்திருக்கிறேன். இந்தியாவில் இங்கிலாந்தைவிட குடும்பப் பற்றுதல் அதிகம்தான். ஆங்கில ஸ்திரீகளுக்கு அநேக வெளிவியவகாரங்களிருக்கின்றன. இந்திய ஸ்திரீகள் குடும்பத்திலேயே சதாகாலமும் உழைத்துவருகிருர்கள்.

யங்க்: இந்திய கிராமவாசிகளான ஸ்திரீகள் கஷ்டப்பட்டு உழைக்கிருர்களென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். தேக ஆரோக்கியத்துக்காகவும், குழந்தைகளை நல்லவழியில் கொண்டுவருவதற்காகவும் அவர்கள் பரிசிரமப்படுகிருர்கள். வருஷத்தில் சில காலங்களில் அவர்களுக்கு ஓய்வு இருக்கும். அறுவடை, நாற்றுநடுவதுபோன்ற சாகுபடி சமயத்தில் அவர்களுக்கு இடைவிடாத வேலை இருந்துவரும்.

ஹண்டு: நகரத்திலுள்ளவர்கள் சோம்பேரிகளாக இல்லை. பஞ்சாபில் ஸ்திரீகள் சமையலைச் செய்கிருர்கள், குழந்தைகளை கவனித்துவருகிருர்கள், அதன்பின் ஓய்வுநேரத்தில் நூல் நூற்கும் யந்திரத்தை எடுத்துக்கொண்டு நூல் நூற்கிருர்கள் அல்லது பூப்போடுகிருர்கள்.

ஸ்டீட்: நம்முடைய கவனத்தை நமது முக்கியமான விஷயத்தில் செலுத்துவோம். குடும்ப வாழ்க்கையென்பது ஹிந்துவுக்கும், முஸ்லிமுக்கும் எவ்வகைப்பட்டதென்று எனக்கு இன்னும் தெளிவுபடவில்லை. கிராமத்திலோ, நகரத்திலோ, நிரந்தரமாக வாழ்வது என்று அதன் பொருளா?

ஹண்டு: நிரந்தரமான குடும்பம் என்று பொருள்படும். இங்கிலாந்தைப்போல பேற்ருேர்களும் குழந்தைகளுமென்பதில்லை; ஒரு வம்சம் என்று பொருள்படும்.

யங்க்: ஆம். இங்கிலீஷ் குடும்பத்துக்கும், இந்தியக் குடும்பத்தும் இது ஒரு மகத்தான வித்தியாசம்தான். என்னுடைய அனுபவத்தில் இந்தியக் குடும்பம் சாசுவதமாக ஒரு இடத்தில் வசித்துவரும். படைகளில் சேவை செய்கிறவர்கள் சுற்றத்தாரைவிட்டு வெகுதூரம் சென்றிருந்தாலும், அவர்களுக்கு குடும்பத்தைப்பற்றி அடிக்கடி கவலை ஏற்படுகிறது.

ஹண்டு: ஆம். குடும்பப் பற்றுதல் வலுவானது.

கிரீக்: குடும்பத்தில் தாய்தான் மூலாதாரம்.

ஹண்டு: ஆம். மாமியாரும்கூட பிள்ளைகளும், நாட்டுப் பெண்களும் தாயாருக்குக் கீழ்படிந்து நடக்கிருர்கள். மனுவும் பின்வருமாறு சொல்லியிருக்கிருர். "ஆயிரம் தகப்பனுர்களைவிட ஒரு தாயாரை மதிக்கவேண்டும்."

கிரீக்: ஹிந்து ஒருவர் தாயாரை லக்ஷியம் செய்துகொண்டு மனைவியை அலக்ஷியம் செய்து வருகிருனென்று அன்று படித்தேன்.

ஹண்டு: இது உண்மையில்லை. இந்தியாவில் கல்வி ஓங்கியிருக்கவில்லை. ஸ்திரீகளுக்குக் கல்வி கிடையாது. ஆகையால் அவர்கள் புருஷர்களுடன் ஒத்து வாழ்ந்துவருகிருர்கள். ஆனல் அது மாறிவிட்டது. இந்தியக் குடும்பத்தில் இதுதான் மகத்தான மாறுதல். புருஷனும் மனைவியும் இப்பொழுது சதிபதிகள் என்பதற்கு மேற்போய்விட்டார்கள்.

கிரீக்: ஹண்டு, குழந்தைகள் பள்ளிக்குச் செல்லுவதற்கும், அவர்கள் வேலை செய்வதற்கும், எவ்விதம் வேலை செய்வதென்பதற்கும் மாமியார் இன்னும் கட்டளையிடுகிருளா?

ஹண்டு: பெரும்பாலும்.

கிரீக்: புருஷனுடன் கலந்தாலோசித்துத்தானே.

ஹண்டு: ஆமாம். அவ்விதம்தான்.

ஸ்டீட்: இதற்கு அடிப்படையாக குடும்பக்கூட்டம் ஒன்று உண்டா?

ஹண்டு: உண்டு.

ஸ்டீட்: ஒரு பெண் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்ருல் அவள் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாமா அல்லது பிறர் இஷ்டப்படி அவள் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமா?

ஹண்டு: குடும்பத்தார்கள்தான் பெண்ணுக்கு விவாகம் செய்ய ஏற்பாடு செய்கிருர்கள்.

ஸ்டீட்: பிள்ளைகளுக்கும் தானே.

ஹண்டு : ஆம்.

கிரீக் : ஆனால் இப்பொழுது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதோ ?

ஹண்டு : ஆம். குடும்பத்திலுள்ள சிறுவர்களும் இப்பொழுது தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடுகிறார்கள்.

ஸ்டீட் : அதாவது குடும்ப சபையின் சக்தி குறைந்துவிட்டதென்று அர்த்தமா? இதுதானா இந்தியாவில் நடைபெறும் மாறுதல்களில் ஒன்று ?

ஹண்டு : அவ்விதம்தான் நினைக்கிறேன்.

யங்க் : பையனோ, பெண்ணோ விரும்பாத ஒருவரை விவாகம் செய்துகொள்ள பெற்றோர்கள் கட்டாயப்படுத்தமாட்டார்கள் அல்லவா ?

ஹண்டு : ஒருபொழுதும் இல்லை. ஆனால் விவாகத்துக்குமுன் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள அவர்களுக்கு சுதந்திரம் அதிகமாக இல்லை. அதுவும் இப்பொழுது மாறிவிட்டது. இது நல்லதுதான். முற்றிலும் மோசமாகுவதை நான் விரும்பவில்லை.

யங்க் : பிறர் ஏற்பாடு செய்யும் விவாகங்களில் அநேக நலன்களிருக்கின்றனவென்று நான் நினைக்கிறேன். இது தர்ம விரோதமானதென்று தோன்றலாம். ஆகிலும் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு அனுகூலமான கூட்டாளிகளைத்தான் தேடி அமைப்பார்கள்.

கிரீக் : நான் இந்த விஷயத்தை வாலிபமுள்ள ஒரு இந்திய ஸ்திரீயுடன் சர்ச்சை செய்தேன். "உனக்கு உரிய புருஷனைத் தேர்ந்தெடுக்க உனக்கு சுதந்திரம் வேண்டுமென்று பிரியப்படுகிறாயாவென்று கேட்டேன். எங்களுடைய பெற்றோர்களைப்போல் எங்களுக்கு அந்த விஷயம் நன்றாகத் தெரியாது என்று அவள் பதிலுரைத்தாள். உனக்கு விவாகமான பின் நீ மற்றொரு சிலாக்கியமான புருஷனைக் கண்டால் நீ என்ன செய்வாய் என்று நான் கேட்டேன். அவள் சொன்ன பதிலை நான் என்றும் மறவேன். "நாங்கள் அப்படி விரும்பக்கூடாது. அதற்கு எங்களுக்கு சந்தர்ப்பமும் ஏற்படாது என்று அவள் சொன்னாள்.

யங்க் : அதற்குக் காரணம் சந்தர்ப்பக்குறைவு மட்டுமல்ல. இந்தமாதிரி எண்ணமே அவர்களில் பெரும்பாலோருக்கு ஏற்படாது. ஏனெனில் ஹிந்து விவாகம் நிரந்தரமானது.

ஹண்டு : ஆமாம், விவாக காலத்தில் சொல்லும் புனிதமான வாக்குறுதியிலிருந்து ஒருவரும் பிறளமுடியாது.

ஸ்டீட் : மூஸ்லீம்கள் அநேகர்களை விவாகம் செய்துகொள்ளுகிறார்களல்லவா ?

யங்க் : இப்பொழுது அதிகமில்லை. இந்தியாவில் எப்பொழுதும் இது ஜாஸ்தியாக இல்லை. ஒரு விஷயம். கிராமத்திலுள்ளவர்கள் மிகுந்த ஏழைகள்.

ஸ்டீட் : நான் பாலினியாவுக்குச் சென்றிருந்தபொழுது அதன் முஸ்லீம் கவர்னர் அவருடைய வீட்டைச்சுற்றி அழைத்துச் சென்றார். உங்களுக்கு அநேக மனைவிகள் உண்டாவென்று கேட்டேன். "அநேகமா ? ஒன்றை சேர்த்துக்கொள்ளுவதற்கே அதிகச் செலவு பிடிக்கும் என்று அவர் பதிலுரைத்தார்.
ஹண்டு, இந்தியாவின் குடும்ப வாழ்க்கையில் எவ்வித மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஹண்டு : முதலாவதாக, ஒரே குடும்பமாக இருந்து வாழ்வது மறைந்துவருகிறது. இது நல்லதுக்கா கெடுதலுக்கா என்பதை இப்பொழுது சொல்ல இயலாது.

யங்க் : இது நல்லதாகத்தான் முடியும். ஏனெனில் ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். ஜனநாயகத்தின் குணங்களை நாம் ஆதரிப்பவர்களாதலால் குடும்பத்திலும், கிராம நிர்வாகத்திலும் அம்முறைகளை அனுபவத்தில் கொண்டுவரவேண்டும். இந்தியாவிலுள்ள குடும்ப வாழ்க்கை யதேச்சாதிகாரமுள்ளதுபோல தோன்றுகிறதல்லவா. ஏனெனில் அந்த வாழ்க்கையில்வாலிபர்களுக்கு தங்களுடைய பிராபல்யத்தை அபிவிருத்தி செய்ய சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. சரிதானே ?

ஹண்டு : ஆகிலும் குடும்ப வாழ்கையில் ஒழுங்கு முறையும் பெரியோர்களின் அனுபவமும் அவர்களுக்கு ஏற்படவில்லையா?

கிரீக் : இங்குள்ள வாலிபர்கள் பெரியோர்களின் அனுபவத்தை உபயோகப்படுத்துவதில்லை. அவர்களும் அதற்காகக் குறைகூறுவதில்லை.

ஸ்டீட் : அனுபவம் ஆபாசமான முறையில் வாலிபர்களைப் பழிவாங்கிவிடுகிறது. நிச்சயமாக இந்தியாவில் ஸ்திரீகளின் விடுதலைக்கு அஸ்திவாரம் போட்டாகிவிட்டது. இந்நாட்டிலும் அந்த இயக்கம் ஏற்கனவே நடைபெற்றது.

ஹண்டு : இந்தியாவில் காங்கிரஸ் ஸ்திரீகளுக்கும் சமமான சுதந்திரத்தை அளித்திருக்கிறது. ஆண் பெண் வித்தியாசமே கிடையாது.

யங்க் : உண்மையாக பிள்ளைகளும் பெண்களும் குடும்பத்தில் சமமாக நடத்தப்படுகிறார்களா? 30 வருடங்களுக்கு முன்னிருந்தது போல்தான் இப்பொழுதும் நடைபெறவில்லையா. இந்தியாவில் மற்றொரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. ஸ்திரீகளும் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உயர்தர வகுப்புப் பெண்களும், நடுத்தர குடும்பப் பெண்களும் ஆண்களைவிட அதிகச் சம்பளம் பெற்று டாக்டர்களாகவும், தாதிகளாகவும் சுகாதார விஸிட்டர்களாகவும் வேலைசெய்து வருகிறார்கள்.

கிரிக் : இங்கிலாந்தில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து குடும்ப வாழ்கையில் ஸ்தம்பிக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஸ்டீட் : போக்குவரத்து அபிவிருத்திதான் இதற்கு முக்கிய காரணம். 50, 60 வருடங்களுக்குமுன் ஒருவனிடம் குதிரையும், துவிச்சக்கிர வண்டியுமில்லாவிடில் அவன் நடந்து செல்லவேண்டும். அதன்மூலம் அவனுடைய வெளி வேலைகளுக்குக் குந்தகம் ஏற்பட்டிருந்தது. ஆகையால் குடும்பத்தார்கள் அங்குமிங்கும் செல்லாமல் வீட்டிலேயே பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார்கள்.

யங்க் : ஆம். பிரிடனில் ஆடவர்கள் வீடுகளிலேயே தங்குவதில்லையே. இப்பொழுது ஸ்திரீகளும் தங்கியிருக்கவில்லை. அவர்களும் மனிதர்களைப்போல் சுதந்திரம் அடைந்துவிட்டார்கள். இந்தியாவிலும் இதன் அறிகுறிகள் காணப்படுகின்றன.

ஸ்டீட் : கிரிக், இந்தியாவில் முக்கியமான மாறுதல் யாது?

கிரிக் : சுயநலம் பாராட்டுதல் அதிகரித்துவிட்டது. நம்மைப்பற்றியும், நமது பொழுதுபோக்குகளையும், நம்முடைய சுதந்திரத்தையும் பற்றிதான் நாம் கவலைப்படுகிறோம்.

ஸ்டீட் : ஹண்டு, இந்தியாவின் நிலைமை என்ன? சென்ற 50 வருடங்களில் இந்தியக் குடும்ப வாழ்க்கையில் எவ்வித மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன?

ஹண்டு : இதுவரையில் கிராமங்களில் அதிகமான மாறுதல் ஏற்படவில்லை. இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. நகரங்களில் கல்வி கற்றவர்களிடையே அநேக மாறுதல்கள் காணப்படுகின்றன. புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும் நெருங்கிய அநேக பாந்தவ்யம் ஏற்பட்டு விட்டது. கோஷா மறைந்துவிட்டது. அநேக பெண்கள் அநேக தொழில்களை மேற்கொண்டு விட்டார்கள். இது வரையில் பெண்களுக்கு சுதந்திரம் கிடையாது. அநேகர் கோஷாவிலிருந்தார்கள். அநேகர் அடைபட்டிருந்தார்கள். இந்தக் கட்டுப்பாடுகள் மாறிவிட்டன.

கிரிக் : இது நலம்தான். ஆகிலும் பிரிடனைப்போல் அங்கு அவ்வளவு அதிகமாக இருக்காது.

ஸ்டீட் : அதன் மூலம் சிசு மரணம் குறைவுபடும். இந்தியாவில் அந்த மரணம் அதிகமாக இருக்கிறது.

யங்க் : ஆமாம். குழந்தைகளில் பாதி பாகம்தான் 22 வயது வரையில் ஜீவித்திருக்கிறார்கள். நமது நாட்டில் 69 பரமஆயுள். இதற்குக் காரணம் ஸ்திரிகள் கல்வி கற்காததுதான். கிராமவாசிகளுக்கு சுகாதார முறைகளே புரிவதில்லை.

ஸ்டீட் : சிசு மரணத்தின் மூலம் சைனுவிற் நடைபெறுவதுபோல் தகுதியுள்ளவர்கள் தான் ஜீவித்திருக்க உதவுமா?

யங்க் : உபயோகமற்ற குழந்தைகள் தான் பிழைத்திருக்கிறதென்று சொல்லவேண்டும். ஒன்று இறந்தால் இரண்டு அல்லது மூன்று பலஹீனமாகவும், சோனியாகவும் ஜீவித்திருக்கின்றன.

கிரிக் : இதற்கு அநேக குழந்தைகளிருப்பது காரணமா?

யங்க் : இளம்பருவத்திலேயே கர்ப்பம் தரிப்பதுதான் இதற்குக் காரணம். ஆனல் இப்பொழுது விவாகம் செய்துகொள்ளக்கூடிய வயது உயர்த்தப்பட்டு வருகிறது.

கிரிக் : நமது நாட்டின் பழக்கம் வேறு விதமாக இருக்கிறது. ஆகிலும் மேற்கு நாடுகளைவிட இந்தியாவில் சதுர மைல்களுக்குள்ள ஜனத்தொகை குறைவாகத்தானிருக்கிறது.

ஸ்டீட் : இந்த அளவில் இந்தியாவின் ஜனத் தொகை அதிகரித்துக்கொண்டேயிருந்தால் வாழ்க்கை அளவை இந்தியா சமாளித்து நிற்க முடியுமா? இது ஒருபெரிய பிரச்னை. இதை நாம் ஏற்கனவே சர்ச்சை செய்திருக்கிறோம்.

ஹண்டு : கல்வி கற்றவர்கள் அதிகக் குழந்தைகளை உண்டுபண்ணவில்லை. ஏனெனில் வேலையில்லாப் பிரச்னை அவர்கள் முன் நிற்கிறது.

கிரீக் : மேலும் அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு நல்ல படிப்புச் சொல்லிக்கொடுக்க பிரியப்படுகிறார்கள்.

ஹண்டு : இதுவும் உண்மைதான்.

ஸ்டீட் : ஸ்திரீகளுக்கு கல்வியேற்பட்டால் என்ன பயன் கிடைக்கும்?

யங்க் : முன் காலத்தில் பையன்களுக்கு உலக விவரங்களில் கல்வி பயிற்சி ஏற்பட்டிருந்தது. ஸ்திரீகளுக்கு குடும்ப முறையில் பயிற்சி ஏற்பட்டது. இப்பொழுது இந்தியப் பெண்களும் உலக விஷயங்களை அறியும் சந்தர்ப்பம் கிடைத்துவிடும்.

கிரீக் : பழைய ஏற்பாட்டில் பள்ளிக்கூடத்திற்கு குழந்தைகள் போகாமலிருந்தபொழுது இந்தியக் குடும்பத்தில் அவர்களுக்கு உண்மையான கலைஞானம் ஏற்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். முன் காலத்தில் இந்திய ஸ்திரி தன்னல மறுப்புடன் புருஷனையும், குழந்தைகளையும் பரிபாலிப்பதில் கவனம் செலுத்திவந்திருக்கிறாள்.

யங்க் : இவ்வளவு அழகிய ஸ்திரீகளை வேறு எந்த தேசமும் பெற்றிராது. நவீன முறையில் கல்வி கற்றிராவிட்டாலும் இந்திய ஸ்திரீகள் ஆடவர்களைவிட உயர்வானவர்கள் தான்.

ஹண்டு : யங்க், நம் ஜாதியைப் பாராட்டியதற்கு உனக்கு வந்தனம். இந்த யுத்தம்தான் இதற்குக்காரணம். முன்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் பெண்கள் பையன்களையும் வாலிபர்களையும்விட அதிக கடுமையான கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தார்கள்.

கிரீக் : அவ்விதக் கட்டுப்பாடு நமது நாட்டிலும் ஒரு சிறிது இருந்தது. ஆனால் இப்பொழுது அது மாறிவிட்டது. பையன்களைப்போல ஸ்திரீகளுக்கு சமமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. குடும்பத்தார் செய்து வந்த வேலையை இப்பொழுது பள்ளிக்கூடங்கள் செய்துவருகின்றன.

யங்க் : இந்த மாறுதலால் சில குடும்பங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகிலும் பிள்ளைகளைப்போல பெண்களுக்கும் கல்வி அவசியம்.

ஹண்டு : ஸ்திரீ குடும்பத்தின் எஜமானராயிருக்கும் இந்தியாவில் மெத்த அவசியம். மேலும் கல்வி பறிவில்லாததால் அவள் அவசியமான மாறுதல்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறாள்.

யங்க் : டாக்டர் என்ற முறையில் இதை அடிக்கடி கவனித்திருக்கிறேன். இது முக்கியமாக கிராமங்களில்தான் அவசியமாகும். அப்பொழுதுதான் ஸ்திரிகள் திடகாத்திரமுள்ள குழந்தைகளைப் பெறுவார்கள்.

ஹண்டு : அதிகமான குழந்தைகளையும் பெற மாட்டார்கள். இதுதான் படிப்பின் பயன்.

ஸ்டீட் : கல்வியின் பயன்களை நாம் பின்பு விவாதிப்போம். நமக்கு நேரமாகிவிட்டது கோஷாவைப்பற்றியும், அதன் மறைவிலிருந்து ஏற்படும் விளைவுகளைப்பற்றியும் விவரமாகப் பேசியிருக்கலாம். கோஷா என்பது ஜன சமூகத்திலும், தேசிய வாழ்க்கையிலும் ஸ்திரீகளைப் பங்கெடுத்துக்கொள்ளாமல் கெடுத்துவிடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மைதான் என்று நான் நினைக்கிறேன். ஜன சமூகத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்கள் எல்லாம் ஸ்திரீகளிடம் மறைமுகமாக இருக்கும் சக்தியை வெளிப்படுத்தவும், அதை ஜன சமூக சீர்திருத்தத்திலும், தேச முன்னேற்றத்துக்கும் உபயோகப்படுத்தவும் உதவவேண்டும்.

நம்முடைய சர்ச்சையின் சாராம்சம் பின்வருமாறு. இந்தியாவில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் சென்ற நூற்றாண்டில் பிரிடனில் நடைபெற்றதைப் பின்பற்றுகின்றன. இந்த மாறுதல்களின் மூலம் பிரிடனைப்போல இந்தியாவிலும் இந்தியர்கள் சிறந்த ஸ்வதந்திரமுள்ள வாழ்க்கையை நடத்துவார்களென்று எனக்கும் நம்பிக்கையிருக்கிறது.

'வி' டயரி-1945.

(குறிப்பு புஸ்தகம்).

லினன் ரு. 1—8—0; ஷிப்ஸ்கின் ரு. 1—12—0; மொராக்கோ ரு. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில்
முதல் காபிக்கு ரு. 0—4—3
அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்குமுந்துங்கள்! **22-11-44** முதல் ஸ்டேட் அச்சாபீஸில் விற்பனைக்குக் கிடைக்கும்.

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கோள்ளலாம் :—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

பிரகிருத **யுத்தத்தில்** அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை **ஸ்டேட்** அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 223. (3-வது பிரிவு).

11-11-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	7.00	15-11-44	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
12-11-44	சூரக்காடு	... ,,	7.00	,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
,,	கோட்டைக்காடு	... ,,	7.30	,,	ராமச்சந்திரபுரம்	... மாலை	7.00
13-11-44	தென்னதிரயன்பட்டி	... ,,	7.00	,,	ராயவரம்	... ,,	7.30
,,	விசலூர்	... ,,	7.30	16-11-44	விராலிமலை	... ,,	7.00
14-11-44	மழையூர்	... ,,	7.00	,,	பொருவாய்	... ,,	7.30
,,	கரம்பக்குடி	... ,,	7.30	17-11-44	வாளரமாணிக்கம்	... ,,	7.00
15-11-44	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00	,,	எம்பல்	... ,,	7.30
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00				

பிரஸங்கம் 224. (4-வது பிரிவு).

18-11-44	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	22-11-44	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
19-11-44	நீர்ப்பழனி	... ,,	7.00	,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
,,	ஆலூர்	... ,,	7.30	,,	வடவாளம்	... மாலை	7.00
20-11-44	புத்தாம்பூர்	... ,,	7.00	,,	சம்மட்டிவிடுதி	... ,,	7.30
,,	வைத்திக்கோவில்	... ,,	7.30	23-11-44	நல்லூர்	... ,,	7.00
21-11-44	கார்த்தாமலை	... ,,	7.00	,,	மாத்தூர்	... ,,	7.30
,,	உப்பிலியக்குடி	... ,,	7.30	24-11-44	நச்சாந்துபட்டி	... ,,	7.00
22-11-44	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00	,,	விராச்சிலை	... ,,	7.30
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00				

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

11—11—44	பொன்னமராவதி.	18—11—44	திருமெய்யம்.
12—11—44	தீத்தான்விடுதி.	19—11—44	மருதன்கோன்விடுதி.
14—11—44	வடகாடு.	21—11—44	ராமச்சந்திரபுரம்.
16—11—44	குழிபிறை.	23—11—44	கிழாநிலை.
17—11—44	புதுக்கோட்டை.	24—11—44	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—14-11-44.